விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 08 செவ்வாய்க்கிழமை (20.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

## மயங்கி விழுந்த குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
மயங்கி விழுந்து விபத்துக்குள்ளான மனநலம் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி 5 நாட்களின் பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். 02

## எதிர்க்கட்சி தலைவர் பதவியை தாருங்கள் – மகிந்த

(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோருவதற்குத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 23

# அரசை விட்டு விலகமாட்டோம்

## சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு) தேசிய அரசாங்கத்தை விட்டு விலகிப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளது. ஜனாதிபதிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப் பின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (23-ம் பக்)

## மகிந்தவை எச்சரித்த சம்பந்தன்; அமைதியான நாடாளுமன்றம்



(கொழும்பு)
ஒன்றிணைந்த இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வையே நாம் கோருகின்றோம். தனி ஈழ கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
தற்போதைய அரசியல் நிலை குறித்து நாடா 02

## க.பொ.த சாதாரண தரத்தில் கூட சித்தியடையவில்லை

### விமலை கிண்டலடித்த ராஜித

(கொழும்பு)
சாதாரண தரத்தில் கூட சித்தியடையாத உங்களுக்கு எவ்வாறு தொழில்நுட்ப அறிவு இருக்க கூடும் என விமல் வீரவன்சவை பார்த்து கிண்டல் செய்யும் விதமாக ராஜித சேனாரத்ன கருத்து தெரிவித்துள்ளார்.
நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை குறித்த விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இவ்விவா 23

# தோல்வியை ஏற்றுக்கொண்டு ஆட்சியை ஒப்படையுங்கள்

### கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்றில் கோரிக்கை

(கொழும்பு)
தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என கூட்டு எதிர்க் கட்சி நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது. தினேஸ் குணவர்த்தன இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.
சமகால அரசியல் நிலைவரம் குறித்து நாடாளுமன்றில் நேற்று விவாதம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 23

## அதிரடி நடவடிக்கைக்கு ஜனாதிபதி மைத்திரி தயார்



(கொழும்பு)
எதிர்வரும் காலப்பகுதியில் அதிரடியான நடவடிக்கைகளில் ஈடுபட ஜனாதிபதி மைத்திரிபால சிறி 23

### ஐ.நா சபையில் இலங்கை தொடர்பில்

## அறிக்கை வெளியிடுகிறார் மனித உரிமை ஆணையாளர்



(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 23

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறை

### யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
தங்கையை தகாத பாலியல் உறவால் தாயாராக்கிய குடும்பத் தலைவர் ஒருவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்
பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி 14 வயதுடைய சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார்.
அதுதொடர்பில் சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறுமியின் பெரிய தாயாரின் மகனான குடும்பத் தலைவர் 02

## கூட்டமைப்பு இன்றி ஆட்சி அமைக்க முடியாது – டளஸ்

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி ஐக்கிய தேசியக் கட்சியினால் தனித்து ஆட்சியமைக்க முடியாதென மகிந்த ஆதரவு ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப் 24

## ஆசிரியையின் கைப்பை அபகரிப்பு

(கரணவாய்)
பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவரின் கைப்பை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் 23

## மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து பிரதமர் ரணில் பதவி விலகவேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில

(கொழும்பு)
மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பதவி விலக வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.
நாடாளுமன்ற கட்டட வளாகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து 02

## புதிய பிரதமருக்கு விரும்பவில்லை எஸ்.பி தெரிவிப்பு



(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி 23

## பிரதமரை பதவி நீக்குவதற்கு சட்ட ஆலோசனை தேவையில்லை

-மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)
பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்குவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை 02

## எதிர்க் கட்சியினரே 2 வருடங்கள் உள்ளது

### ஞாபகப்படுத்தினார் ராஜித



(கொழும்பு)
எமது கழுத்தை பணயம் வைத்து கடந்த 2015 ஆம் ஆண்டு பெற்றெடுத்த 23

## கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு

### பட்டம் ஏற்றிய போது சாவகச்சேரி பகுதியில் நடந்த விபரீதம்

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரியில் பட்டம் ஏற்றிய சிறுவன் கிணற்றில் விழுந்து பலியாகியுள்ளார்.
யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் பகுதியில் பட்டம் ஏற்றிக்கொண்டிருந்த 16 வயது சிறுவன், கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று மாலை 5 மணிய 24

## தமிழீழ கதைகளை கூறி சிங்கள மக்களை தொடர்ந்து ஏமாற்றினால்

### தமிழீழம் நிச்சயம் மலரும் – சம்பந்தன்

(கொழும்பு)
தமிழீழ கதைகளை கூறி சிங்கள மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றினால், நிச்சயம் தமிழீழம் மலரும் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவை, எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் எச்சரித்துள்ளார்.
நேற்று திங்கட்கிழமை நாடாளுமன்ற விசேட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,
நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 44.69 வீத வாக்குகளை பெற்றுள்ள 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுமியை வன்புணர்ந்த...

ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம் பெற்று வழக்கேடுகள் சட்டமா அதிபரிடம் பாரப்படுத்தப்பட்டதுடன் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

16 வயதுக்குட்பட்ட சிறுமியான உறவு முறைத் தங்கையை இரண்டு தடவைகள் வன்புணர்வுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தனித் தனியே முன்வைத்து சந்தேக நபருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் தாக்கல் செய்தார்.

அதனடிப்படையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. எதிரி சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையானார்.

உறவுமுறைத் தங்கையை வன்புணர்வுக்குட்படுத்தியமைக்கு எதிரி தற்போது வருத்தமடைகின்றார். அவர் மீதான இரண்டு குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக்கொள்கிறார். எதிரி 5 பிள்ளைகளின் தந்தையாவார். எனவே அவரின் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு இந்த மன்று குறைந்தபட்ச தண்டனையை வழங்கவேண்டும் என்று எதிரியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் முன்வைத்தார்.

எதிரி தனது குற்றங்களை ஏற்றுள்ளார். எனினும் உறவுமுறையான தங்கையை அவர் வன்புணர்வுக்குட்படுத்தியதன் ஊடாக அந்தச் சிறுமிக்கு ஒரு பெண் குழந்தை உள்ளார். எதிரி இந்தக் குற்றத்தைச் செய்யும் போது, சட்டமுறைத் திருமணத்தின் ஊடாக 3 பிள்ளைகளின் தந்தையாகவும் இருந்துள்ளார். எதிரியின் குற்றத்துக்கு 7 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள்வரையான சிறைத தண்டனையை வழங்க முடியும். எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனையை வழங்குவதுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றில் விண்ணப்பம் செய்தார். இரண்டு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

சிறிய தாயாரின் மகளான அந்தச் சிறுமி தங்கை முறை உடையவர். உறவுமுறைத் தங்கையுடன் தவறான பாலியல் உறவு வைத்தமைக்கு எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. எதிரி அதே குற்றத்தை மீளவும் புரிந்துள்ளதால் அதற்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. இரண்டு தண்டனைக் காலத்தையும் எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க முடியும்.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபாய் இழப்பீட்டை எதிரி வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும். தண்டமாக 10 ஆயிரம் ரூபாய் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 2 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என தீர்ப்பளித்தார். (ம-9,4)

## மக்களின் ஆணைக்கு...

தெரிவித்த போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ரணில் பதவி விலகாவிட்டால், நாட்டில் மக்கள் போராட்டம் வெடித்து மக்கள் சக்தியின் மூலம் பதவியிலிருந்து துரத்தப்படுவார். இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமைத்துவ மாற்றம் தேவைப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்து போட்டியிட்ட போதிலும், 32 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டது. ஆனால் இன்று பிரதமர் பதவியுடன், அரச அதிகாரங்களை தன்னகத்தே வைத்துக் கொண்டும் அவர்களினால் 33 வீதமான வாக்குகளையே பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் எங்களைச் சந்திக்கும் போது, ஐயோ இந்த தலைவருடன் பயணிக்க முடியாது என்று புலம்புகின்றனர். ஆனால் சிறிகொத்தாவிற்கு சென்றவுடன் தலைவரே நாம் உங்களுடன் என்று கூறுவதுடன், ஆவணங்களிலும் கைச்சாத்திடுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சகல உறுப்பினர்களுக்கும், தலைவரை மாற்றி புதிய தலைமைத்துவத்தில் பயணிக்க விருப்பம். ஆனால் யார் அதனை ஆரம்பித்து, அதற்காக குரல் கொடுத்து முன்னின்று நடத்துவது என்பதில் அச்சப்பட்டு பின்வாங்குகின்றனர். கடந்த இரு வாரங்களில் சிறு சிறு பிரச்சினைகளை முன்னிறுத்தி, எத்தியோப்பியாவிலும், நேபாளத்திலும், தென்னாபிரிக்காவிலும் பிரதமர்கள், ஜனாதிபதிகள் பதவி நீக்கப்பட்டார்கள்.

இந்த நாட்டில் 33 வீத வாக்குகளைப் பெற்ற பிரதமரை, 67 வீதமான மக்கள் நிராகரித்துள்ளார்கள் என்பதே அர்த்தமாகும். மக்களினால் நிராகரிக்கப்பட்டும் பிரதமர் பதவி விலகாமல் இருப்பதினால் எத்தியோப்பியாவிலும் விட பின்னோக்கிய நிலையில் இலங்கை இருப்பதாகவே கருதப்படுகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பதவி விலக வேண்டும். இல்லையேல் அரசியலமைப்பு, நீதிமன்றம் மற்றும் அரசியல் நடவடிக்கை மூலம் அவரை பதவி நீக்குவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். அது முடியாவிட்டால் நாட்டில் மக்கள் போராட்டம் வெடிப்பதை தவிர்க்க முடியா தென்பதை, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என கூறினார். (ம)

# நிபந்தனைக்கான சேவைக்காலம் முடிந்தும் இடமாற்றம் வழங்கப்படவில்லை

## வடக்கு முதலமைச்சருக்கு ஆசிரியர்கள் கடிதம்

(யாழ்ப்பாணம்)

நிபந்தனையூடான சேவையின் தேவை கருதி 2015ஆம் ஆண்டு வன்னிப் பகுதிக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களாக நாங்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் நிபந்தனைக்கு அமைய மூன்று வருடங்கள் சேவையை நிறைவு செய்துள்ள போதிலும் எமது நிரந்தர வலயங்களுக்கான இடமாற்றம் இதுவரை வழங்கப்படவில்லை எனக் கூறி, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள அக் கடிதத்தில்,

09.02.2015இல் இருந்து செயற்படும் படியாக 3 வருட காலம் சேவையை வழங்குதல் என்ற நிபந்தனையுடன் வன்னிப் பகுதிக்கான இடமாற்றம் எமக்குத் தரப்பட்டது.

இந்த மாதம் 9ஆம் திகதியுடன் மூன்று வருட கால சேவை நிறைவுற்றுள்ள போதிலும் அதனை நிறைவேற்றுவதற்கு வலய, மாகாண மட்டங்களில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கல்வி அதிகாரிகள் தந்த உறுதி மொழியை நம்பி பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வன்னி பகுதிக்குச் சென்று சேவையாற்றிய எங்களுக்கு,

வழங்கப்பட்ட எழுத்து மூல வாக்குறுதிக்கு அமைய எமது நிரந்தர வலயங்களில் சேவையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட அக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ம)

## மயங்கி விழுந்த...

ஏழாலை மத்தியை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சுப்பர் தெய்வேந்திரம் (வயது 58) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்துள்ளார். இவர் கடந்த 13ஆம் திகதி அதிகாலை வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். வெளியே சென்ற இவர் திசை மாறி சென்று மீண்டும் வீட்டிற்கு திரும்பி வர முடியாமல் வீதிவழியாக சென்றுள்ளார்.

மாலை நேரம் குப்பிளான் சந்தி பகுதியில் மயங்கி விழுந்துள்ளார். உடனடியான அப்பகுதியில் உள்ள மக்கள் இணைந்து அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

குடும்பத்தினர் இவரை காணவில்லை என தேடி அலைந்து இறுதியில் கடந்த 15 ஆம் திகதியே குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை அறிந்துள்ளனர். அன்றைய தினமும் இவர் நினைவிழந்த நிலையிலேயே காணப்பட்டுள்ளார். இந்த நிலையில் 5 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## பிரதமரை பதவி...

அவசியமற்றதென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பிரதமரை பதவிநீக்கலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று திங்கட்கிழமை கலந்துகொண்ட மகிந்த, அதன் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பிரதமராக வந்தால் மாத்திரமே அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்குவோம் எனக் குறிப்பிட்ட மகிந்த, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதமருக்கு ஆதரவளிக்க மாட்டோமென தெரிவித்தார். எனினும் பிரதமர் ரணிலுக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கும் இடையில் காணப்படும் உடன்படிக்கையின் பிரகாரமே பிரதமர் பதவி அமையுமென மகிந்த தெரிவித்தார்.

அத்தோடு, தாம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோரியுள்ளதோடு, அதன் பிரகாரம் உரிய இடம் கிடைக்குமென நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, எதிர்காலத்தில் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளீர்கள் என ஊடகவியலாளர்கள் வினவிய போது, பொறுத்திருந்து பாருங்கள். விரைவில் தெரியும் எனக் கூறிச் சென்றுள்ளார். (ம)

## மகிந்தவை எச்சரித்த...

ளுமன்றில் நேற்று இடம்பெற்ற விசேட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இவற்றையும் மீறி ஈழம் பிறக்குமாயின் அது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே பிறக்கும்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது பொதுஜன முன்னணியும் மிகவும் கீழ்த்தரமாகவே தேர்தல் பிரசாரம் செய்திருந்தார்கள்.

அரசாங்கத்திற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளிக்கும் வாக்குகள் ஈழம் உருவாக வழிவகுக்கும் என அப்பாவிச் சிங்கள மக்களை வழிநடத்தி இருந்தார்கள்.

இது மிகவும் தவறானது. இப்படியாக சாதாரண சிங்கள மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என நாடாளுமன்றில் சம்பந்தன் எச்சரித்தார்.

இதேவேளை நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற விசேட விவாதத்தில் ஆளும் மற்றும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உரையாடும் போது பலத்த வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றன.

விமல் மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு இடையிலும் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

எனினும் சம்பந்தனின் உரையின் போது கூட்டு எதிர்க்கட்சியோ வேறு கட்சியினரோ எவ்வித குழப்பங்களையும் ஏற்படுத்தாமல் அமைதியாக இருந்தார்கள்.

மகிந்தவை பகிரங்கமாக விமர்சித்த போதும் கூட்டு எதிர்க்கட்சியினர் ஒரு வார்த்தை கூட பேசியிருக்கவில்லை. அத்துடன் சம்பந்தன் தனது உரையை முடித்துக்கொண்டு அமரும் போது அவருடைய உரைக்காக கைத்தட்டல்கள் எழுந்ததையும் அவதானிக்க முடிந்தது. (ம)


ஈராண்டு நினைவினில்

தோற்றம்
06 - 05 - 1989

மறைவு
20 - 02 - 2016



அமரர் தெய்வேந்திரன் பகீசன்

அமரர் தெய்வேந்திரன் பகீசனின் ஈராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம், கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் **இறுதிப் போட்டி:**

**உடுப்பிட்டி யூத் எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ்**

**இடம்:**-இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம்

**காலம்:**-இன்று (20.02.2018) பி.ப 2.00

**தலைவர்:**-திரு.மா.செல்வதாஸ்
(ஆசிரியர் யா/உடுத்துறை ம.வி)

**பிரதம விருந்தினர்:**-திரு.எஸ்.அருளானந்தம்
(மாவட்ட முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி)

**“தாரணி”**
**இமையாணன், உடுப்பிட்டி.**

**-குடும்பத்தினர்**

(2849)

# சென்னையில் தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு

(சென்னை)

மே - 17 இயக்கம் சார்பில் தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அண்ணா அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாநாட்டை மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் விரிவாதிக்க கொள்கையும், தமிழீழ விடுதலையின் முக்கியத்துவமும் என்ற தலைப்பில் முதல் அமர்வு நடைபெற்றது.

இதனை மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி தொடங்கி வைத்தார். (இ-10)



# தேசிய அரசாங்கம் தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பு இல்லை

## தினேஷின் கேள்விக்கு சபாநாயகர் பதில்

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்திலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகுவது தொடர்பில் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பும் கிடைக்கவில்லையென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, கட்சி தலைவர்களிடம் இதுகுறித்து தெளிவுபடுத்தல்களை கோரவுள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்திலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகுவதாக பரவலாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனைச் சுட்டிக்காட்டியே தினேஷ் குணவர்த்தன மேற்குறித்த கேள்வியை எழுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே கரு ஜெயசூரிய உள்ளிட்ட பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

தேசிய அரசாங்கம் பிளவுபடும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பினர் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வாய்ப்பு உள்ள நிலையில், அதனைத் தகர்ப்பதற்கான வியூகம் ரகசியமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# எந்நேரத்திலும் பிரதமரின் பதவி பறிபோகலாம்

## ஜி.எல்.பீரிஸ் எதிர்பார்ப்பு



(கொழும்பு)

பிரதமரை எந்த நேரத்திலும் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

கெட்டம்பே விகாராதிபதியை நேற்றுக்காலை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு எந்த நேரத்திலும் அமைச்சரவையை கலைப்பதற்கான அதிகாரம் உள்ளது.

அமைச்சரவையை கலைக்கின்றபோது பிரதமரும் தானாகவே அதிகாரங்களை இழக்கின்றார்.

சில வேளைகளில் ஜனாதிபதி சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனினும், கடந்த காலங்களில் சட்டமா அதிபரால் முக்கிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் தவறானதாக அமைந்துள்ளதாக ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-10)

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு ரூ.15ஆயிரம் கொடுப்பனவு மாத்திரமே

## வேறு சலுகைகள் கிடையாது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாவை மாத்திரம் வழங்குவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன்படி, மோட்டார் சைக்கிள், தொலைபேசிக் கொடுப்பனவு, தொலைநகல் (பக்ஸ்) இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட மாட்டாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

"எனினும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசி உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகள் தேவை என்றால் உள்ளூராட்சி ஆட்சி நிர்வாகத்தை சரியாக முன்னெடுத்து, வரி வருமானத்தின் ஊடாக இவ்வாறான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்" எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற அமர்வுகளை நடத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கினால், மன்றங்களுக்குச் சொந்தமான மண்டபங்கள் அல்லது நிதி இயலுமைக்குப் பொருத்தமான வகையில் மாற்று இடங்களில் அமர்வுகளை தற்போதைக்கு நடத்த முடியும் என்றும் அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-10)

# 15பேருடன் வெளியேறி எதிரணிக்கு வருவேன்

## மகிந்தவிடம் உறுதியளித்த சுசில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இல்லாத அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்கத் தவறினால், தாம் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டு எதிரணிக்கு வந்து விடுவோம் என்று அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த உறுதியளித்துள்ளார்.

சுதந்திரக் கட்சின் தேசிய அமைப்பாளரான சுசில் பிரேமஜெயந்த கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்பின் போதே, இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.



தற்போதைய கூட்டு அரசாங்கம் மக்களின் ஆணையை இழந்து விட்டது. எனவே, அதிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ அனைவரையும் தாம் வரவேற்பதாக தெரிவித்தார். (இ-10)

# இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்த அமரர் கந்தையா நீலகண்டன்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமாகிய கந்தையா நீலகண்டன் காலமாகியது பற்றிய செய்தி சற்று முன்னர் வந்தது. விதியை நொந்தாலும் மனத்தின் நோவைத் தடுக்க முடியாது. நீலகண்டன் எப்பொழுதுமே இனிமையாகப் பழகுவார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு அவரூடாகவே நடைபெற்றது. உள்ளிருந்தே அவருடைய மாமன்றப் பணிகளைக் கண்டு அளவிடும் வாய்ப்புக் கிடைத்தது.

தலைமைத்துவம் என்பது எப்படிப்பட்டது என்பதை அவருடைய செயற்பாடுகளும் பணிகளும் இளையவர்களுக்கு வழிகாட்டுவனவாக அமைந்தன. இரண்டு தடவை அவருடன் சேர்ந்து இந்து மகாநாடு ஒழுங்கு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தேன்.

அவ் வேளைகளில் அவருடைய செயற்பாடுகளைக் கண்டு நான் வியப்படைவதுண்டு. மிகக் கண்டிப்பாக இருக்கும் அவர் வேண்டிய இடங்களிலே விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதைப் பல தடவை கண்டுள்ளேன்.

அவர் சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் நல்லிணக்கத்துக்கும் பல நிலைகளிலே பணியாற்றினார். ஆறுமுகநாவலர் விழாவை மட்டக்களப்பிலும் சுவாமி விபுலானந்தர் விழாவை யாழ்ப்பாணத்திலும் வைப்பதிலே மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

இவருடைய முயற்சியினால் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்துமாமன்றம் சுவாமி விபுலானந்தர் விழாவை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தியது.

அதில் கலந்து கொண்ட நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் "வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் நோக்கில் கிழக்கில் ஆறுமுக நாவலர் விழாவும் வடக்கில் விபுலானந்தர் விழாவும் நடைபெறுகின்றன." என்று கூறினார். இதற்குக் காரணமாயிருந்தவர் அமரர் க. நீலகண்டனே.

நீலகண்டன். அன்னை துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி மீது அளவில்லாத பக்தி கொண்டவர். அகில இலங்கை இந்துமாமன்றத்தினால் நடத்தப்பட்ட இந்து ஆராய்ச்சி மாநாட்டின்போது அம்மாவுக்கு சிறப்புச் செய்வதற்கு ஒரு விருதுப் பெயர வழங்கவேண்டுமென எண்ணி அதனை என்னிடம் கூறினார்.

அடுத்த நாள் அவருடன் காரில் செல்லும்போது விருதுப் பெயர் ஆக்கிவிட்டீர்களா என்று கேட்டேன். "இல்லை" என்றார். 'சைவத் திருமகள்' என்று வைத்தால் எப்படியிருக்கும் என்றேன். உடனே அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் "தெய்வத் திருமகள்" என்று வைப்போம் என்று கூறினார்.

அம்மாமீது அவர் கொண்டிருந்த அன்பினையும் பக்தியினையும் நான் உணர்ந்து கொண்டேன். எல்லாக் கூட்டங்களிலும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனை "சைவபானு" என ஆசையுடனும் மகிழ்வுடனும் விளிப்பது போல அம்மாவை "தெய்வத் திருமகள்" என்று விளிப்பதிலே ஒரு பக்தி உணர்வினைப் பெற்றுக் கொண்டார்.

தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு அவர் பலரை உருவாக்கியுள்ளார்.

அவர்கள் அவருடைய பணிகளைத் தொடர்ந்து ஆற்றி அவருக்கு சாகாவரம் கொடுப்பர் என்று நம்புகிறேன். எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கந்தையா நீலகண்டன் சிவகாமி உடனுறை நடராசப் பெருமானுடைய தாமரைத் தாள்களிலே அமைதியுற்று அமர அந்த ஆடவல்லானுடைய பேரருளையே வேண்டி நிற்கிறோம்.

பேராசிரியர்
**அ.சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாள் பேராசிரியர்
யாழ். பல்கலைக்கழகம்

# தல தோனியின் தலைமையில் சிஎஸ்கேயில் விளையாடுவது மகிழ்ச்சி – மிட்சல் சான்ட்னர்



ஐபிஎல் 2018 சீசனில் மகேந்திர சிங் தோனியின் தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாட இருப்பது மகிழ்ச்சி என சான்ட்னர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிரிமீயர் லீக் ரி20 கிரிக்கெட்டின் 11ஆவது சீசன் ஏப்ரல் 7ஆம் திகதி தொடங்குகிறது.

இதற்கான ஏலம் கடந்த மாதம் நடைபெற்றது. நியூசிலாந்து அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான சான்ட்னரை 50 லட்சம் ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஏலம் எடுத்தது.

மகேந்திந்திர சிங் தோனி தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாட இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என சான்ட்னர் கூறியுள்ளார்.

இதுகுறித்து சான்ட்னர் கூறுகையில், "நான் சர்வதேச போட்டியில் தோனிக்கு எதிராக பந்துவீசியதை விட, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் வலைப்பயிற்சியின் போது அவருக்கு பந்து வீச இருப்பது என்றும் மகிழ்ச்சியாக இருக்கும்.

சிஎஸ்கே அணியுடன் இணைய இருப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அனுபவ வீரர்களான தோனி, ரெய்னா, ஜடேஜா போன்ற வீரர்களுடன் பேசுவது விளையாடுவது சிறப்பானதாக இருக்கும்.

ஐபிஎல் தொடரில் ஒரு வீரராக இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அத்துடன்சிஎஸ்கே குடுமபத்தில் இணைய இருப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஐபிஎல் உலகின் மிகப் பெரிய ரி20 லீக் தொடர். அதிகஅளவிலான ரசிகர்கள் மத்தியில் எனது திறமையை வெளிப்படுத்த இருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. சிஎஸ்கே அணி வெற்றி பெற வேண்டும், சம்பியன் பட்டத்தை கைப்பற்ற வேண்டும் என்பது தான் அல்டிமேட்லி குறிக்கோள்" என்றார்.

# பவுன்சர் சவாலுக்காக காத்திருக்கிறேன் – ஸ்மித்

தென்னாபிரிக்க தொடரில் ஷோர்ட் பிட்ச் பவுன்சர் தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியி ருந்தது. மூன்று ஆடுகளங்களிலும் வேகப்பந்து வீச்சாளர்கள் அமர்க்களப்படுத்தினர்.

பவுன்ஸ், வேகம், ஸ்விங் என ஆடுகளம் அதிக அளவில் அவர்களுக்கு ஒத்துழைத்தது.

அவுஸ்திரேலியா சமீபத்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தை 4-0 என வீழ்த்தியது. அந்த அணியில் உள்ள மிட்செல் ஸ்ராரர்க், ஹேசில்வுட், பட் கம்மின்ஸ் ஆகியோர் இங்கிலாந்தின் கடைநிலை துடுப்பாட்ட வீரர்களை ஷோர்ட் பிட்ச் பவுன்சர் பந்தால் அச்சுறுத்தி விக்கெட்டுக்களை சாய்த்தனர்.


ஆஷஸ் தொடர் முடிந்த நிலையில் அவுஸ்திரேலியா இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. தற்போது முத்தரப்பு ரி20 தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடர் நாளையுடன் முடிவடைகிறது.

அதனபின் அவுஸ்திரேலியா தென்னாபிரிக்கா சென்று நான்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

மார்ச் முதலாம் திகதி டர்பனில் முதல் டெஸ்ட் தொடங்குகிறது. 2ஆவது டெஸ்ட் மார்ச் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை போர்ட் எலிசபெத்திலும் 3ஆவது டெஸ்ட் மார்ச் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கேப் டவுனிலும் நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் மார்ச 30 ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை ஜொகன்னஸ்பேர்க்கில் நடக்கிறது.

இது குறித்து ஸ்மித் கூறுகையில், இந்தியாவிற்கு எதிராக டெஸ்ட் தொடரில் வேகப் பந்துவீச்சால் அச்சுறுத்திய தென்னாபிரிக்கா, அவுஸ்தி ரேலியாவிற்கு எதிராகவும் வேகப்பந்து வீச்சை முக்கிய துருப்புச்சீட்டாக பயன்படுத் தும்

அதேவேளையில் இங்கிலாந்தை எப்படி அச்சுறுத்தினமோ, அதேபோல் தென்னாபிரிக்காவையும் அச்சுறுத்துவோம். தென்னாபிரிக்காவிற்கு எதிரான வேகப்பந்து வீச்சு சவாலை எதிர்பார்த்துக் கொண்டிக



கிறேன்.

இரண்டு அணிகளில் இருந்தும் ஷோர்ட் பிட்ச் பந்துவீச்சு இருக்கும். இரு அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களும் கடை நிலை துடுப்பாட்ட வீரர்கள் ஒவ்வொருவரும் இதை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இது சிறப்பானது என்று நான் நினைக்கிறேன். இந்த சவாலால் நான் மகிழ்ச்சியாக உள்ளேன். உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களுக்கு எதிராக விளையாட நீங்கள் விரும்புவீர்கள்.

துடுப்பாட்ட வீரர்கள் நிச்சயமாக இந்த தொடரை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ரசிகர்கள் போட்டியை ரசிக்கும் வகையில் சிறந்த தொடராக இருக்கும். தென்னாபிரிக்கா அவுஸ்திரேலியாவில் உள்ள சூழ்நிலை போன்றே இருக்கும்" என்றார்.

# கொல்கத்தாவின் தலைமைப் பதவிக்கு குறிவைக்கும் அதிரடி மன்னன் லீன்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைமைப் பதவி வழங்கப்பட்டால் ஏற்றுக் கொள்வேன் என்று கிறிஸ் லின் ஆர்வம் காட்டியுள்ளார்.

ஐபிஎல் சீசன் 2018க்கான வீரர்கள் ஏலம் கடந்த மாதம நடைபெற்றது. ஐபிஎல தொடரில் 8 அணிகள் பங்கேற்கின்றன.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியன்தலைவராக டோனியும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தலைவராக வோர்னரும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவராக விராட் ஹோலியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவராக ஸ்ரீபன் ஸ்மித்தும் மும்பை அணியின் தலைவராக ரோகித் சர்மாவும் பணியாற்ற இருப்பது உறுதியாகியுள்ளது.

ஆனால் டெல்லி டேர் டெவில்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு யார் யார் தலைவர்களாக பணியாற்ற போகிறார்கள் என்பது குறித்து அதிகாரப்பூர்வமான தகவல்கள் ஏதும் அந்த அணிகளால் வெளியிடப்படவில்லை.

தினேஷ் கார்த்திக், றொபின் உத்தப்பா, கிறிஸ் லின் ஆகியோர் தலைமைப்



பதவிக்கான போட்டியில் முன்னணியில் உள்ளனர்.

தினேஷ் கார்த்திக்குக்கு தலைமைப் பதவியில் அனுபவம் உள்ளது. அதேவேளையில் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் லின்னும் போட்டியில் உள்ளார்.

கொல்கத்தா அணியின் தலைவருக்கான தேர்வில் கிறிஸ் லின் உள்ளார் என்று ஆலோசகரான கலிஸ் கூறியுள்ளார்.

இந்நிலையில் தலைவர் பதவி வந்தால் ஏற்றுக் கொள்வேன் என்று கிறிஸ் லின் கூறியுள்ளார். இது குறித்து கிறிஸ் லின் கூறுகையில், "தலைமைப் பதவியை நான் கட்டாயம் விரும்புவேன். அந்த வாய்ப்பிற்காக போட்டி போடுவேன். கொல்கத்தா அணி சிறந்த குரூப்பை பெற்றுள்ளது.

பயிற்சியாளர்கள் கடிச், கலிஸ், ஹீத் ஸ்ரீக் ஆகியோருடன் என்னால் சிறந்த முறையில் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். தலைமைப் பதவிக்கான அனுபவத்தை வளர்த்துக் கொண்டு வரும் நிலையில், தலைமைப் பதவி வந்தால் அதில் இருந்து எக்காரணம் கொணடும் பின் வாங்க மாட்டேன்" என்றார்.

கொல்கத்தா அணியால் 9.5 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்ட கிறிஸ் லின்னுக்கு இது ஐந்தாவது ஐபிஎல சீசனாகும். கடந்த சீசனில் 7 போட்டிகளில் 295 ஓட்டங்கள் குவித்தார். ஸ்ட்ரைக் ரேட் 180.98 ஆகும்.

# நான் நெஞ்சால் பூஜிக்கும் தலைவன் பிரபாகரன் தமிழீழ எழுச்சி மாநாட்டில் வைகோ உருக்கம்



(சென்னை)

தமிழீழ விடுதலை உணர்வு என்பது 43 ஆண்டுகளாக எமது உதிரத்தில் உறைந்துள்ளது. எமக்கும் புலிகளுக்கும் இடையில் உள்ள உறவு சாதாரணமானது அல்ல என வைகோ தெரிவித்தார்.

மே 17 இயக்கம் சார்பில் தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு சென்னை சேப்பாக்கத்தில்உள்ளஅண்ணா அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நான் நெஞ்சால் பூஜிக்கும் தலைவன், என் வாழ்நாளில் இறுதிவரை தலைவனாக ஏற்றுக்கொண்ட தலைவன், உலகம் இது வரை கண்டிராத ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து தமிழனுக்கு இந்த உலகத்தில் முகவரியை தேடிக்கொடுத்த தலைவன் பிரபாகரன்.

உண்ணாவிரதம் இருக்கும் திலீபனின் தலையை தன் மடியில் தாங்கிக்கொண்டு இருந்தார். எங்கும் கண்ணீர், தவிக்கும் பெற்றோர். இந்தக் காட்சியை இந்தியாவில் அனைத்துத் தலைவர்களுக்கும் போட்டுக் காண்பித்தேன்.

ஒக்டோபர் 10 ஆம் திகதி தான் ஈழ வரலாற்றில் மிக முக்கிய திருப்பம் ஏற்பட்டது. அப்போதுதான் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. தலைவர் பிரபாகரனை நயவஞ்சகமாக அழைத்து வந்து அசோக்கா ஹோட்டலில் மறைத்து வைத்து விட்டார்கள். இதை உலகுக்குத் தெரியப்படுத்தியவன் நான்தான்.

அங்கு 33 நிமிடங்கள் என்னுடன் பேசினார். நானும் நச்சுக் குப்பி கட்டியிருக்கின்றேன். எமது பிணங்களின் மீதுதான் இந்திய இராணுவம் நடந்து செல்லும். அந்த பிணங்களில்தான் இந்த பிரபாகரனின் சடலமும் கிடக்கும்என எனக்குச்சொன்னார்.

எம்.ஜி.ஆரை பிரபாகரன் பார்த்தபோது கட்டிப்பிடித்து அழுதார் எம்.ஜி.ஆர். இந்தியா-இலங்கை ஒப்பந்தத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என பிரபாகரனிடமும் என்னிடமும் எம்.ஜி.ஆர்.கூறினார்.

இந்திய இராணுவம் இலங்கையில் தமிழ் மக்களைக் கொன்று குவித்த போது. குமரப்பன், புலேந்திரன் உள்ளிட்ட 12 புலிகள் நச்சுக் குப்பிகளை கடித்து உயிரிழந் தனர்.

ஒக்டோபர் 5 ஆம் திகதி மைதானத்தில் அவர்களுடைய சடலங்களை வைத்த போது என் தலைவன் அங்கு வந்தான். ஆயுதங்களை ஒப்படைப்பதாக கூறிய தலைவன் அன்றுதான் அனைவருக்கும் தெரிய துப்பாக்கியை எடுத்து இடுப்பில் சொருகினார். அப்போதுதான் மோதுவதற்கு தயாராகினார். அப்போது போரிட்டு மடிவது என்று தலைவர் முடிவெடுத்தார் என வைகோ மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஜெயலலிதாவின் சிகிச்சையில் எந்த முறைகேடும் இல்லை டி.டி.வி.தினகரன் தெரிவிப்பு



(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் எந்த முறைகேடும் இடம்பெறவில்லை என ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற திருமண விழாவொன்றில் கலந்து கொண்ட பின்னர் அவரை சந்தித்த ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய தினகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தன்னுடைய சிகிச்சை குறித்து தெரிந்து கொள்ளாத அளவிற்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஒன்றும் விபரம் தெரியாதவர் அல்லர். எனவே அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்து நன்கு அறிவார். சிகிச்சையில் எந்த முறைகேடும் இடம்பெறவில்லை என்பதை நான் உறுதிப்படக் கூறுவேன்.

தற்போது தமிழகத்தை ஆளும் ஆட்சி முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காகவே தான் மக்கள் ஆர்.கே. நகர் தொகுதிக்கான தேர்தலில் எனக்கு வாக்களித்தனர்.

என்னைப் பற்றி அவதூறாக பேசும் அமைச்சர்கள் அடுத்து இடம்பெறும் தேர்தலில் டெப்போசிட் கூட வாங்க மாட்டார்கள்" என தினகரன் மேலும் தெரிவித்தார். (இ-10)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா நீலகண்டன்



சிரேஷ்ட சட்டத்தரணியும், நீலகண்டன் & நீலகண்டன் சட்ட நிறுவனத்தின் பிரதான பங்காளரும், அகில இலங்கை இந்துமா மன்றத்தின் (இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்) தலைவருமான கந்தையா நீலகண்டன் 2018-02-18 ஆம் திகதி இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கந்தையா மற்றும் சின்னத்தங்கத்தின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி வே.முருகேசு மற்றும் தமயந்தியின் மருமகனும், சசிதேவியின் அன்புக் கணவரும், சரவணன், ஜனனி, பிரணவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துளசி, செந்தூரன், மைத்திரேயி ஆகியோரின் மாமனாரும், நவநீதன், சுகந்தன், நிர்பயண் ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற குலசேகரம், காலஞ்சென்ற செல்லம்மா, வல்லிபுரநாதன், கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுந்தரம், கமலாசனி, இராமச்சந்திரன், ரேனுகாதேவி, காலஞ்சென்ற ஜனாதிபதி சட்டத்தரணி A:R.சுரேந்திரன், நித்தியானந்தன், அஸ்வினி ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீபவானந்தன், நிலானி, கவானி, வெங்கடேசன், சங்கரி ஆகியோரின் மாமாவும், கமலநாதன், துர்கதர்ஷினி ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்ற பிரதர்ஷனி, பிரசாந்தன், பவித்ரா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை (21-02-2018) இல. 39, ஜோசப் ஒழுங்கை, கொழும்பு 4 இல் இருந்து பிற்பகல் 3.00 மணியளவில் கிரியைகள் நிறைவுபெற்று, பொறளை கனத்தை இந்து மயானத்தில் (Hindu Section) மாலை 4.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 39, ஜோசப் ஒழுங்கை,
கொழும்பு 4,
தொலைபேசி: 077 318 5285

தகவல்:
சரவணன்
நீலகண்டன் (மகன்)

(வ-1653)

# இராசி பலன்

**20.02.2018**

மாசி 08, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 3.19 மணிவரை

ரேவதி பிற்பகல் 1.00 மணிவரை

சுபநேரம் 11.02-12.32 மணிவரை

இராகுகாலம் 3.32-5.02 மணிவரை

சித்தாமிர்தம்

வளவன்

கிரகநிலை: சந் ; சூரி, புத, சுக் ; கேது ; சனி ; குரு, செவ் ; ராகு

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை
மதியம் 12.27 மணிக்கு
மேட-சந்

**மேடம்:** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினர்களுடன் குதூகலம் தரும் பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** காலையில் தாமதமான காரியமொன்று மாலை நேரம் கைகூடும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கன்னி:** புதிய விடயங்களை காலைப் பொழுதே செய்து முடிப்பது நல்லது, தொழிலில் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், திட்டமிட்ட பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** சுபகாரியச் செலவுகள் கூடும் நாள், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகும்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்; குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், வழிபாடு பெருமை சேர்க்கும்.

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அரசும் மக்கள் பிரதிநிதிகளும் பாராமுகம்

## நாட்டுக்கே பெரும் அவமானம்–ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி உறவினர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ஒருவருடத்தினை எட்டியுள்ளது.

அரசும், வெற்றிபெற்ற தமிழ் அரசியல்வாதிகளும் கண்டுகொள்ளாமல் விட்ட ஒருசில முக்கிய பிரச்சினைகளில் இதுவுமொன்று., பேரம் பேச திராணியற்று அரசிடம் சோரம் போன தமிழ்த்தலைமைகளின் செயற்பாடுகளால் இந்த பிரச்சினை நீண்டுகொண்டே போகின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.


அரசு இதற்கு ஒரு தீர்வினை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அரசுக்குக் கொடுத்த அழுத்தம் போதுமானதல்ல. அன்றேல் மக்களுக்கு விசுவாசமாக அவர்கள் செயற்படவில்லை என்பதே தெளிவாகின்றது. தமிழ் மக்களின் வாக்குகளைப்பெறுவதற்குகாட்டுகின்ற வேகத்தினை இவ்விடயத்திலும் காட்டியிருக்க வேண்டும்.

தமிழர்களின் அதிகபடியான வாக்குகளால் வெற்றி பெற்ற நல்லிணக்க அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளில் ஒன்றான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒரு நியாயமான தீர்வினை கூறாமல் காலம் கடத்தி இழுத்தடித்து பின்னர் கைவிட்டமை ஜனநாயகத்தை விரும்பும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதை அரசுக்கு எடுத்துக் கூறி தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியாத தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் கையாளாகாத்தனத்தை எண்ணி அவர்கள் வெட்கித் தலை குனிய வேண்டும். வெற்றி பெற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை இவர்களைப் பார்த்துச் சென்றும் பாராமுகமாய் இருப்பது வேதனை தரும் விடயமாகும். இவர்களின் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத தமிழ் பிரதிநிதிகள் தமது பதவிகளைத் துறக்க வேண்டும்.

இதுவரை தமது உறவுகளை தொலைத்த வலிகளுடன் எட்டுப் பெற்றோர் தமது உயிர்களைப் பிரிந்தது உலகறிந்த விடயமாகும். ஏனைய தாய்மார்களும் வீதிகளில் இவ்வாறு கண்ணீரோடுபோராடிக்கொண்டுள்ளனர். இவர்கள் கைகளால் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பிலான உண்மை நிலைமை என்ன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

இதேபோன்று எவ்வித குற்றச்சாட்டுக்களும் உறுதிப்படுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அரசு வழிவகுக்க வேண்டும். இவ்வாறான எமது தமிழ் இளைஞர்-யுவதிகளின் பாரிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்படும்வரை தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்ந்தும் வலியுறுத்தும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்ச்சியான நிலைப்பாடாகும் இதே வேளை இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு தமிழர்விடுதலைக்கூட்டணி முழுமையாக ஆதரவு வழங்கும் என்பதுடன், சிவில் அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள், போக்குவரத்து சேவையினரின் ஒத்துழைப்பினையும் வேண்டி நிற்கின்றது என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)



வடமராட்சி கிழக்கு, பூனைத் தொடுவாய் கடற்பரப்பில் கடந்த 1994 ஆம் ஆண்டு கடற்றொழிலுக்கு சென்ற 10 மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால், வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட 10 மீனவர்களுடைய 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் கட்டைக்காடு பொது நோக்கு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றினார். (படங்கள்:-பொறப்பதி செய்தியாளர்)

## கமத்தொழில் காணி இடாப்பு மக்கள் பார்வைக்காக வைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கமநலசேவைகள் நிலையப்பிரிவில் அமைந்துள்ள இருபாலை தெற்கு (ஜே/257), இருபாலை கிழக்கு (ஜே/258) மற்றும் கோப்பாய் தெற்கு (ஜே/260) ஆகிய பிரிவுகளின் வயற்காணிப்பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் கமத்தொழில் காணி இடாப்பு பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உரும்பிராய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ



யாழ்.வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபையுடன் இணைந்து தொண்டர் சபையால் நடத்தப்படும் வருடாந்த இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் ஸ்ரீ கணேச வாசிகசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குருதி வங்கி பொறுப்பதிகாரி வைத்தியர் ம. பிரதீபன் பரிசோதனை செய்தார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். செம்பியன்பற்று தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.கணேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச கல்வி அதிகாரி கே.கே. யோகநாதன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேச கல்வி அதிகாரி எஸ்.திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ

➢➢➢➢➢➢➢➢➢➢

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச கல்வி அதிகாரி எஸ்.தேவகுமரன், கௌரவ விருந்தினராக கல்லூரி பழைய மாணவன் ஏ.வேங்கடரமணா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## E-Learning இறுவெட்டுக்கள் அறிமுகமும் மாணவர்களுக்காக கையளித்தலும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல் பாடங்களுக்கான E - கற்றல் இறுவெட்டுக்களை அறிமுகம் செய்து மாணவர்களுக்கு கையளிப்பதற்கான நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில் அறிமுக இறுவெட்டினை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுவைப்பார்.

இந் நிகழ்வுக்கு, வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்வி பணிப்பாளர் (விஞ்ஞானம்), 1AB வகை பாடசாலை அதிபர் / பிரதி அதிபர், ஆசிரியர்கள் இருவர், (பௌதீகவியல், உயிரியல், இரசாயனவியல்.), கணிதப் பிரிவு மாணவர் ஒருவர், விஞ்ஞானப் பிரிவு மாணவர் ஒருவர் பங்கு கொள்ள வேண்டியது அவசியம் என வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ-9)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கை 22, 23 ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து எம்மை பாதுகாக்கும் முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய் தாக்கத்திலிருந்து விடுபட முடியும்.

இந்த தேசிய நிகழ்வு அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்கள், சுற்றுச்சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டெங்கு களத் தரிசிப்பு நடைபெறும் விபரம், 22ஆம் திகதி-ஜே/97, ஜே/101, 23ஆம் திகதி-ஜே/86, ஜே/87.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு நுளம்பு பெருகாதவாறு சுத்தமாகவைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ

# தமிழீழம் உருவாக விரைவில் அரசியல் தீர்வு வர வேண்டும்

## மலேசிய பினாங்கு மாகாண துணைமுதல்வர் ராமசாமி வலியுறுத்து

(சென்னை)

**இலங்கைத் தமிழ் மக்களுக்கு தமிழீழம் என்பது முக்கியமான ஒன்று என்ற போராட்டத்திற்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் தள்ளப்பட்டார் எனவும் தமிழீழம் உருவாக விரைவில் அரசியல் தீர்வுவர வேண்டும் என மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி வலயுறுத்தியுள்ளார்.**



மே - 17 இயக்கம் சார்பில் தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அண்ணா அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மாநாட்டை மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி தொடக்கி வைத்தார்.

மாநாட்டில் தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் விரிவாதிக்க கொள்கையும், தமிழீழ விடுதலையின் முக்கியத்துவமும் என்ற தலைப்பில் முதல் அமர்வு நடைபெற்றது. இதனை மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி தொடக்கி வைத்தார். கொண்டல்சாமி வரவேற்றார். கவிஞர் காசி ஆனந்தன், திரைப்பட இயக்குநர் அமீர் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

முன்னதாக பினாங்கு மாகாண துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி அளித்த பேட்டி வருமாறு, மாநாடு நடத்த எத்தனை சிரமப்பட்டு இருப்பார்கள் என்று தெரியும். இலங்கைத் தமிழ் மக்களுக்கு தமிழீழம் என்பது முக்கியமான ஒன்று என்ற போராட்டத்திற்கு தலைவர் பிரபாகரன் தள்ளப்பட்டார். ஈழத்தில் அப்பாவி தமிழர்களை சிங்கள அரசு கொன்று குவித்தது. ஈழ மக்களுக்கு உரிய விடுதலை இல்லை. பல பிரச்சினைகளை இன்னும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் மூலம் தமிழீழம் அமைய விரைவில் அரசியல் தீர்வு வர வேண்டும். ஏன் இந்த மக்களுக்கு சரியான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இலங்கையில் இனப்படுகொலை நடந்தது கொடூரமானது. இது குறித்து சர்வதேச விசாரணை நடத்துவோம் என சொல்லியும் அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழர்கள் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள்தான். இலங்கையில் தமிழீழம் அமைவதுதான் நோக்கம். அதற்கான அரசியல்தீர்வு, அதற்கான முயற்சிதான் இந்த மாநாடு எனத் தெரிவித்தார்.

மாலையில் நடந்த அமர்வில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, பினாங்கு துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி, தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் துணை செயலாளர் வீரபாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் பாலாஜி, மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா உட்பட பலர் கலந்துகொண்டனர். (இ-10)

## தொழிலாளர் தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தின் மனிதவள மற்றும் எமிர் மயமாக்கல் அமைச்சர் நசீர் பின் தானி அல் ஹம்லிக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரளவுக்கும் இடையில் வீட்டு வேலையாட்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடுநிலையான வலுவான வேலை சுற்றுவட்டத்தை இரு நாடுகள் தொடர்பில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கவனம் செலுத்துகிறது என அமைச்சர் நசீர் பின் தானி அல்ஹம்லி தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மனித வலுவை வழங்குவதில் இலங்கை முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. கடந்த வருடம் சமூக வலைத் தளங்களை பார்வையிட்டவர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அதிகம் என டுபாய் பொலிஸார் தமது புள்ளி விபரத்தை வெளியிட்டனர்.

ஒளிவு மறைவின்றி சட்டத்திற்கு மதிப்பளித்து இலங்கை தொழிலாளர்கள் தெரிவு செய்யப்படுவது மட்டுமின்றி வேலைவாய்ப்பு முகவர்களின் செயற்பாட்டை ஒழுங்குபடுத்துவதும் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஹம்லி மேலும் தெரிவித்தார். (இ-10)


"சங்கவி மாங்கல்ய சேவையின்" இலவச பதிவுகள்

கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளியில் இயங்கி வந்த எமது சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் இடமாற்றம் செய்யவுள்ளோம்.

இவ்விஸ்தரிப்பை துரிதப்படுத்தி விரிவாக்கம் செய்யும் வகையில் இலவச விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விரும்புவோர் உள்நாடு, வெளிநாடு அடங்கலாக சகல தரப்பு வரண், வனிதையர்களின் பூரண விபரங்களடங்கிய விண்ணப்பங்களை தொடர்பு இலக்கங்களுடன் (T.P) கீழ் காணும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கவும்.

N.B இச்சலுகை மார்ச் 15 வரையுமே.

BUSINEES BANK

சந்தை முன்புறம், பிரதான வீதி, மானிப்பாய். (2844)



இலவச தையல் பயிற்சி வகுப்புகள்

இடம்: நலமங்கை நிலாசம், இராசவீதி, கோப்பாய் மத்தி.

வகுப்புகள் கிழமை நாட்களில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 25.03.2018

T.P இல. 021 223 0418

நிர்வாகம் (2845)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/8276 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/8298 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/8277 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 33 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: CIMA/தனியார் தொழில்<br>தொ.இ: G/7535 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 10<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/8279 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BA, MA/ ஆசிரியர்<br>தொ.இ: G/7539 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/8281 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 55 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7540 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

எமது காணியை படையினர் சுவீகரிக்க இடமளியோம்

# வட்டுவாகல் நில அளவீட்டை எதிர்த்து பாரிய போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் கடற்படையினர் ஆக்கிரமித்துள்ள பொதுமக்களின் காணியில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெற வுள்ள நில அளவீட்டை எதிர்த்து பாரிய எதிர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெள்ளா முள்ளிவாய்க்கால் கிராமிய அபிவிருத்தி சங்க தலைவர் த. சிறிகாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், போரின் காரணமாக எமது சொந்த நிலங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்தோம். வட்டுவாகலுக்கும் வெள்ளா முள்ளிவாய்க்காலுக்கும் இடைப்பட்ட 617 ஏக்கர் பரப்பளவுடைய நிலம் 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு சொந்தமான காணி ஆகும்.

அங்கிருந்து நாம் இடம்பெயர்ந்த பின்னர் எமது காணிகளை கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளனர். இக் காணி பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலம் என்பதுடன் கடற்கரையும் அருகில் அமைந்துள்ளது.

போர் நிறைவுற்ற பின்னரும் அந்த நிலம் அனைத்தும் படையினர் வசம் உள்ள காரணத்தினால் எமது சொந்த நிலத்துக்கு போக முடியாது பெரும் துன்ப நிலையை அனுபவித்து வருகிறோம்.

எமக்கான உரிய தொழில் துறைகள் எதுவும் தற்போது இல்லை. எமது சொந்த இடத்துக்கு சென்றால் எமக்கான தொழில் துறைகளை நாமே மேற்கொள்வோம்.

இந்த காணியை விடுவிக்குமாறு கோரி பல தடவைகள் போராட்டங்கள் மேற்கொண்டோம்.

தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கும் பல தடவை இது தொடர்பில் அறிவித்துள்ளோம். எமது நிலத்தை மீட்டுத்தருமாறு கோரிக்கையும் விடுத்திருந்தோம்.

ஆனால் அவர்கள் மீட்டுத்தருவதாக உறுதி அளித்தும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

நாளை மறுதினம் 22 ஆம் திகதி இந்த காணியை சுவீகரிப்பதற்கு நில அளவீடு மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

எமது காணியை சுவீகரிப்பதற்கு நாம் இடமளிக்க முடியாது, எமது நிலம் எமக்கு வேண்டும். எனவே இந்த நில அளவீட்டை எதிர்த்து பாரிய போராட்டத்தை அன்றைய தினத்தில் மேற்கொள்ளவுள்ளோம் என தெரிவித்தார். (2-9)




## வவு.பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(குருமன்காடு)

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கி கேரளக் கஞ்சாவை கடத்தி சென்ற வரை வவுனியா பொலிஸார் பழைய பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.15 மணிக்கு குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கி கஞ்சா கடத்துவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய கிளிநொச்சி கிழக்கைச் சேர்ந்த வயது 33 நபரொருவரின் பயணப் பொதியை சோதனை யிட்டபோது அதில் இருந்த 2 கிலோ 10 கிராம் கேரளக் கஞ்சா வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (2-250)

## பாடசாலை மாணவர்களுக்கு பேருந்து சேவை ஆரம்பம்

இயக்கச்சி பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கான பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு அமைவாக இப் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இயக்கச்சி, வாடியடி, புளியடிச் சந்தியிலிருந்து தினமும் காலை 6.20 மணிக்குப் புறப்படும் பேருந்து சங்கத்தார் வயல், கோயில்வயல், ஊடாக பயணித்து பனிக்கையடிச் சந்தி ஊடாக இயக்கச்சி சந்தியை சென்றடைந்து மீண்டும் ஏ-9 வீதியூடாக பயணித்து கிளி/ பளை மத்திய கல்லூரியை காலை 7.20 மணியளவில் வந்தடையும். தொடர்ந்து பாடசாலை முடிந்தவுடன் மீண்டும் பயணித்த வீதியூடாக இயக்கச்சி வாடியடி புளியடிச் சந்தியை பிற்பகல்வந்தடையும். எனவே பாடசாலை மாணவர்கள் இப் பேருந்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (2-64)

## உருத்திரபுரம் கமக்கார அமைப்புக்களின் புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

### கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(சிவநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களின் புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சக்திபுரம் கமக்கார அமைப்பிற்கானதெரிவுபொது நோக்குமண்டபத்தில்நடைபெறும்

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புதுமுறிப்பு கமக்கார அமைப்பிற்கான தெரிவு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உருத்திரபுரக்குள கமக்கார அமைப்பிற்கான தெரிவு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு குஞ்சுப் பரந்தன் கமக்கார அமைப்பிற்கான தெரிவு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு டி- 8 பெரிய பரந்தன் பகுதிகளுக்கான கமக்கார அமைப்புக்களுக்கான தெரிவுகள் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு டி-10 உருத்திரபுரம் கமக்கார அமைப்பிற்கானதெரிவுபொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் மார்ச்மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜெயந்தி நகர் கமக்கார அமைப்பிற்கான தெரிவு கமநல சேவை நிலையத்தில் நடைபெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சோலை நகர் கமக்கார அமைப்பிற்கான தெரிவு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எனவே அனைத்து விவசாயிகளையும் அந்தந்தஅமைப்புக்களின் அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கமநலசேவைஉதவிஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

## இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன வழங்கப்படும் தண்டனை பாடமாக அமையட்டும்

### ஹரிஸ்ணவியின் தாயார் கண்ணீருடன் தெரிவிப்பு

(குருமன்காடு)

மாணவி ஹரிஸ்ணவி வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் நீதியைப் பெற்றுத்தர முடியவில்லை என் ஹரிஸ்ணவியின் தாயார் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி எனது மகள் ஹரிஸ்ணவி 14வயதில் வீட்டில் தனியாக இருந்தபோது பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்று கடந்த 16ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன.

இரண்டு வருடங்கள் கடந்தவிட்ட நிலையிலும் இன்று வரையில் எனது மகளுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எனவே வித்தி யாவின் பாலியல் படு கொலை யுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுவிட்ட நிலையில் எனது மகளின் பாலியல் படு கொலையுடன் தொடர்புபட்ட நபருக்கு இன்னும் தண்டனை பெற்றுக் கொடுப்படவில்லை. நீதியும் நிலைநாட்டப்படவில்லை.

இச்சம்பவமானது மக்களின் மனதிலிருந்து மெல்ல மெல்ல மறைந்து சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு சம்பவம் இனி மேல் எந்தத் தாய்க்கும் எமது நாட்டில் ஏற்பட்டு விடக் கூடாது. வழங்கப்படும் தண்டனை ஒரு பாடமாக அமைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

இவ்வழக்கு சார்பாக பெண் கள் அமைப்பினரின் சட்டத்த ரணி ஒருவரினால் முன் னெடுத்துச் செல்லப்படுகின் றது. அடுத்த வழக்கு விசா ரணை எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)

## 2 இலட்சத்து 40 ஆயிரம் மீன் குஞ்சுகள் ஐந்து நீர்ப்பாசனக் குளங்களில் விடப்படும்

### ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி )


உலக தரிசனம் நிறுவனத்தின் (வேள்விசன் ) 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 5 நீர்ப்பாசன குளங்களில் 2 இலட்சத்து 40 ஆயிரம் சுலாப்பி இன நன்னீர் மீன் குஞ்சுகள் எதிர்வரும் வாரத்தில் விடப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் வகையில் 45 நாட்களில் 500 கிராம் நிறையை அடையும் நன்னீர் மீன் குஞ்சுகள் விடப்படவுள்ளன.

இந்த மீன் குஞ்சுகள் இரணைமடு நீர்ப்பாசனக் குளத்தின் மீனவ சங்கத்திடம் இருந்து ஒரு மீன் குஞ்சு இரண்டு ரூபாய் வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கற்சிலைமடுக் கமக்கார அமைப்பிற்குட்பட்ட ஒட்டுசுட்டான் பெருங்கருவேப்பம்குளம், ஒட்டுசுட்டான் பெரிய குளம் ஆகிய குளங்களில் தலா 30, ஆயிரம் மீன் குஞ்சுகள் வீதம் மொத்தம் 60 ஆயிரம் மீன் குஞ்சுகளும் மன்னா கண்டல் கமக்கார அமைப்பிற்குட்பட்ட வெளி வயல் குளத்தின் கீழ் 90 ஆயிரம் மீன் குஞ்சுகளும், பழம்பாசி கமக்கார அமைப்பிற்குட்பட்ட தவசிகுளத்தில் 45 ஆயிரம் மீன் குஞ்சுகளும் சமணங்குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட குடிதாங்கிய குளத்தில் 45 ஆயிரம் மீன் குஞ்சுகளுமாக மொத்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் சுலாப்பி இன மீன் குஞ்சுகள் விடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## காணாமற்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு காலணிகள், துவிச்சக்கரவண்டி



(மல்லாவி )

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 80 ஆயிரத்து 610 ரூபா நிதி யொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர் களுக்கு காலணிகள், துவிச்சக்கரவண்டி மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார தொழில் முயற்சிக்காக நீர் இறைக்கும் இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த உதவிப் பொருட்கள் நேற்று முன்தினம் காலை முள்ளியவளையில் உள்ள பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மேற்படி காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 40 பேருக்கு 31 ஆயிரத்து 260 ரூபா பெறுமதியான காலணிகளும் முள்ளியவளை பொன்நகர் கிராமத்தில் வாழும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவருக்கு 16 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டியும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முத்தையன் கட்டு இடதுகரை கிராமத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார தொழில் முயற்சிக்கு விவசாயத்தை மேற்கொள்வதற்காக 32 ஆயிரத்து 850 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (2-15)

## பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழா முன்னாயத்தக் கூட்டம்

### கிளி.மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெறும்

(பூநகரி)

பூநகரி பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மார்ச் மாதம் 3 ஆம் திகதி அதிகாலை திருவிழா திருப்பலியுடன் நிறைவுபெறும்.

குறித்த திருவிழா தொடர்பிலான முன்னாயத்தக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இதன் இரண்டாம் கட்ட முன்னாயத்தக் கூட்டம் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும்.

இந்த முன்னாயத்தக் கூட்டத்திற்கு முப்படைகளின் தளபதிகள், பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பூநகரி பிரதேச சபை செயலர் உட்பட கிராம அலுவலர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முன்னாயத்தக் கூட்டத்தில் பூநகரி பங்குத்தந்தை, ஆலய மூப்பர் ஆகிய பல தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

திருவிழாவின் போது கலந்து கொள்ளும் அடியவர்களின் வசதி கருதி குடிநீர் வசதி, சுகாதார சேவைகள் வசதி, போக்குவரத்து வசதி ஆகியவை தொடர்பில் இறுதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(2-84)

# உறவுகளைத்தேடும் போராட்டம் நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தி

### கிளிநொச்சியில் இன்று போராட்டத்திற்கு ஆதரவாக அணி திரளுமாறு அழைப்பு

(பரந்தன்)

யுத்தம் மற்றும் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட காலப்பகுதிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களின் உறவுகளுக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் எல்லா மாவட்டங்களிலும் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இவ்வாறு கிளிநொச்சியிலும் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் நேற்று 365 ஆவது நாளாக தீர்வின்றி இரவு பகலாக தொடர்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என எவரும் இல்லை என நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் அறிவித்திருந்த நிலையிலும் இவர்களின் போராட்டம் தொடர்கிறது.

இதேவேளை இனிவரும் நாட்களில் தங்களின் போராட்ட வடிவத்தை மாற்றவுள்ளதாக கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-315)



# உங்கள் துன்பங்களை புரிந்துள்ளேன் இலங்கை அரசுடன் கலந்துரையாடுவேன்

### போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுக்கும் அமைப்பின் பிரதிநிதி தெரிவிப்பு



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகளுடன் ஐரோப்பிய நாட்டினைத் தள மாகக் கொண்டு இயங்கி வரும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குரல் கொடுக்கும் அமைப்பின் பிரதிநிதி வூவி தலைமையிலான பிரதி நிதிகள் குழு சந்தித்து கலந்துரையாடியதுடன், உறவுகளை ஆற்றுகைப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று திங்கட்கிழமையுடன் 349 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் ஐரோப்பிய நாட்டினைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குரல் கொடுக்கும் அமைப்பின் பிரதிநிதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் வெளிநாட்டு பிரதிநிதி வூவியிடம் கருத்துத் தெரிவிக்கையில், வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கண்ணீர் மல்க தமது துயரங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வூவி,

இலங்கைக்கான 3 ஆவது பயணமாக இந்தப் பயணம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் வருகை தரும் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் தகவல் அறிந்து கொண்ட போதும் உங்களைச் சந்திக்க முடியவில்லை, இம்முறை உங்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்துள்ள நிலையில் உங்களது துன்பங்களைப் புரிந்து கொண்டுள்ளேன். இது தொடர்பில் இலங்கை அரசு அதிகாரிகளுடனும் மற்றும் எமது அமைப்பின் ஏனைய பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல் செய்வேன் என்று தெரிவித்தார். (2-15)

# விவசாய விற்பனை தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பயிற்சிநெறி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பீடைகொல்லிகள் விற்பனை நிலையங்களை பதிவு செய்தலின் கீழ் ஒவ்வொரு விற்பனை நிலையங்களிலும் பயிற்சி பெற்ற விவசாய விற்பனை தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்ற 2011.07.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிக்கு அமைவாக ஏற்கனவே விண்ணப்பித்து பீடை நாசினிகள் பதிவாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட 32 உதவியாளர்களுக்கான 200 மணித்தியாலங்களை உள்ளடக்கிய பயிற்சி நெறியானது வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தலைமையில் மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், எல்லப்பர் மருதங்குளத்தில் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியின் ஒருங்கிணைப்பாளராக விவசாயப் போதனாசிரியர் க.கதீசன் செயற்படுவதோடு, ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 12.05.2018 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியின் வளவாளர்களாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலக சிரேஷ்ட நிலை விவசாயப் போதனாசிரியர்களைக் கொண்டு 12 தொகுதிக்கூறுகளாக (Module) நடத்தப்படுகின்றது. பயிற்சியின் இறுதியில் பரீட்சை நடத்தப்பட்டு சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

இச்சான்றிதழை பெற்ற ஒருவரே பீடை கொல்லிகளை விற்பனை செய்வதற்காக விவசாய இரசாயன விற்பனை நிலையங்களில் இருத்தல் வேண்டும். அவ்வாறு பயிற்சி பெற்ற நபர் ஒருவர் காணப்படாத விற்பனை நிலையங்கள் அடுத்தாண்டு முதல் பீடைகொல்லிகள் கட்டுப்படுத்தற் சட்டத்தின் பிரிவு 21(அ) இன் பிரகாரம் விற்பனை அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க முடியாது.

இப்பயிற்சி நெறியின் உதவியாளர்களுக் கான அடிப்படை கல்வித்தகைமையாக க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் 4 திறமைச்சித்தி அடங்கலாக சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வானது எதிர்காலத்தில் பீடைகொல்லிகள் விற்பனை நிலையம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் நம்பகத்தன்மையை மக்களிடையே ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. (2)

## கிளிநொச்சி பிரதான தபாலகத்திற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த அதிகாரியை நியமிக்க முயற்சி

(கண்டாவளை)

கிளிநொச்சி பிரதான தபாலகத்திற்கு பெரும்பான்மையினத்தைச்சேர்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி பிரதான தபாலகத்தில் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரியை இடமாற்றம் செய்து அதே பதவிக்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, அரச சேவையின் தரம் 1 தகுதியுடைய அதிகாரியொருவரையே இப்பதவிக்கு நியமிக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன், இந்நியமனத்திற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(2-315)




# கைவிடப்பட்ட நிலையில் 30 சிறிய குளங்கள்

### புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட சேதமடைந்த மற்றும் கைவிடப்பட்ட சுமார் 30 இற்கும் மேற்பட்ட சிறியகுளங்கள் காணப்படுவதாகவும் இவற்றைப் புனரமைத்துத் தருமாறும் இப் பகுதி விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம் ஆகிய கமநலசேவை நிலையத்திற் குட்பட்ட பகுதிகளில் சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட கைவிடப்பட்ட, சேதமடைந்த சிறிய விவசாயக் குளங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற குளங்களின் கீழ் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களும் கடந்த யுத்த காலத்தில் கைவிடப்பட்டு காணப்படுகின்றன.

இவற்றைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை ஏற்கனவே புனரமைக்கப்பட்ட குளங்களின் கீழுள்ள பயிர்ச்செய்கை நிலங்களை விடுவித்து விவசாயச் செய்கைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.(2-315)



சி.கா.செந்திவேலினால் எழுதப்பட்ட வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை எனும் அரசியல் விமர்சன பகுப்பாய்வு நூலின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது...

# எதேச்சதிகாரமாகிய ஏக பிரதிநிதித்துவத்தின் மீதான சம்மட்டி அடி

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை அறிக்கை

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடந்து முடிந்திருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவானது எதேச்சதிகாரமாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏக பிரதிநிதித்துவத்திற்கு தமிழ் மக்கள் கொடுத்த சம்மட்டி அடியாகவே அமைந்துள்ளது என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் வாக்குப் பலத்தில் கிடைக்கப்பெற்ற தமிழ் மக்களின் ஏக பிரதிநிதித்துவம் எனும் அதி உயர் நிலையில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை செயற்பட்டுவந்த விதமானது தமிழ் மக்களின் எதிர்கால இருப்பையே கேள்விக்குறியாக்கும் வகையிலேயே அமைந்திருந்தது.

உலகத்தாரை ஏமாற்றும் முனைப்பில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்பு திருத்த நடவடிக்கையாக கொண்டு வரப்பட்டிருக்கும் இடைக்கால வரைபிற்குள் தமிழர்களுக்கான தீர்வு இருப்பதாக வடிகட்டிய பொய்யைக் கூறியதோடு நிற்காது அவ் இடைக்கால அறிக்கை மீதான தமிழர்களின் அங்கீகாரமாக தமது வெற்றியை அர்த்தப்படுத்தும் ஏமாற்று வித்தையை தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் செய்யத் துணிந்திருந்தார்கள்.

நடைபெற்றது கிராம அபிவிருத்தியை மேற்கொள்ளும் அதிகார சபைக்கான தேர்தலாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சதியில் இருந்து தமிழர்களை மீட்டெடுக்கும் தர்மயுத்தமாகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களம் தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பொது வெளியில் பலர் பட்டும் படாமலும் குரலெழுப்பி வந்தபோதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேரடி மோதலில் தனித்து களமிறங்கிப் போராடியிருந்தார்கள்.

நல்லாட்சி அரசு மற்றும் வல்லரசு நாடுகளின் ஆதரவு மற்றும் ஏலவே தமிழ் மக்களால் வழங்கப்பட்டிருந்த ஏக பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்துடன் அதீத பலம் வாய்ந்தவர்களாக தேர்தலை எதிர்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை, உண்மை-நேர்மை-நம்பிக்கை ஆகிய வற்றின் துணையுடன் எதிர்கொண்டிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பெற்றிருக்கும் அடைவானது தாயக அரசியல் குறித்த கவலை நிலை போக்கி பெரும்நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

தாயகம்-தேசியம்-தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாட்டின் வழியேயான தமிழ்த்தேசிய அரசியலை சமரசமின்றி முன்னெடுத்துவந்த ஒரே காரணத்திற்காக தமிழின விடுதலை என்ற இலட்சியத்தை நோக்கியதாக தமிழீழத் தேசியத் தலைமையால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தார்கள்.

இந்தப்பின்னணியில், கடந்து வந்த பாதை தோல்விகளாலும், நிராகரிப்புகளாலும், துரோகங்களாலுமே இட்டு நிரவப்பட்டிருந்த நிலையிலும் ஏற்றுக்கொண்ட இலட்சியத்திலிருந்து துரும்பளவேனும் வழுவாது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முன்னெடுத்து வந்திருந்த தூய அரசியலுக்கான அங்கீகாரமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியது போன்று தம்மை அசைக்க முடியாதென்று இறுமாப்பிலிருந்த தமிழரசு கூடாரத்திற்குள் பெரும் நில நடுக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தாயகத் தமிழ் மக்களின் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

கண்கட்டு வித்தை முறை அரசியல் மூலம் மக்களை ஏமாற்றி, சிங்கள-சர்வதேச ஏகாதிபத்திய எஜமானர்களின் நலன்களுக்கு ஒத்திசைவான போக்கில் அடிபணிவு அரசியல் செய்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதேச்சதிகாரப் போக்கிற்கு தமது வாக்குகள் மூலம் தாயகத் தமிழ் மக்கள் கடிவாளம் போட்டுள்ளார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்தை, தமிழர் விரோத நிலைப்பாட்டில் ஊறித்திளைத்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர் கையகப்படுத்தியதன் விளைவாக ஆயுத மௌனிப்பின் பின்னரான காலத்தில் தமிழர்களின் இருப்பு மற்றும் எதிர்காலம் ஆட்டம் காணத் தொடங்கியிருந்தது.

தாம் எது செய்தாலும் தேர்தல் என்று வந்தால் தமிழர்கள் பழக்க தோசத்தில் வீட்டுக்கு நேரே புள்ளடியைப் போட்டுவிடுவார்கள் என்ற மமதையுடன் செயற்பட்டு வரும்தமிழரசுக் கட்சியின் தலைவர்களை தேர்தல் முடிவானது நிலை குலைய வைத்துள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதியில் இரண்டு சபைகளைத் தவிர்த்து வேறெங்கும் தனித்து ஆட்சியமைக்கமுடியாத இழுபறி நிலையை தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன. மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினர் என்ற நகையாடல்களுக்கு மத்தி யிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெற்றிருக்கும் அடைவானது பெரு வெற்றியே.

இதுவரை காலமும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகத் திகழ்ந்ததுடன் மத்தியில் ஆட்சியாளர்களின் தயவைப் பெற்று டாம்பீகமாக வாழ்ந்து வரும் தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு கிடைத்திருக்கும் அடைவானது பெரும் வீழ்ச்சியாகும்.

ஜனநாயகத்தில் மக்களே எஜமானர்கள் என்பதையும் ஏற்றி வைத்தவர்களை கீழிறக்கவும் ஏற்றிவைக்கத் தவறியவர்களை ஏற்றிவைத்த தவறை நேர் செய்யவும் தம்மால் முடியும் என்பதனை மீண்டுமொரு தடவை இடித்துரைத்துள்ளார்கள் தாயகத் தமிழர்கள்.

அரசியல் ரீதி யான பலம் ஏதுமின்றி கொண்ட கொள்கையில் திடமான நிலையும் தூய கரங்களுமே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை நோக்கியதான தமிழ் மக்களின் நிலை மாற்றத்தின் அடிப்படையாகும்.

இது ஒரு தொடக்கம் மாத்திரமே. தமிழ் மக்களின் உரிமைக் குரலாக சர்வதேச அரங்கில் ஓங்கி ஒலிப்பதற்கான முழுநிறைவான அங்கீகாரத்தை அடைவது அவசியமாகும்.

ஆகவே, தற் போதைய இழுபறி நிலையை முன்னிறுத்திய தான அரசியல் சதுரங்க காய் நகர்த்தல்களுக்குள் சிக்குண்டுவிடாது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் தூய அரசியல் பயணத்தை தொடர்வதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

அத்துடன், தாயக அரசியல் வெளியில் சமரசமின்றி தமிழர் நிலையை எடுத்தியம்பி வரும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் தமிழ் மக்கள் பேரவை மற்றும் கொள்கை உறுதிப்பாட்டுடன் தமிழ்த் தேசிய அரசியலில் இயங்கி வருபவர்களையும் அரவணைத்து ஆரோக்கியமான அரசியல் பயணத்தை முன்னெடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம் என அனைத்துலக ஈழத் தமிழ் மக்களவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# தற்போதைய அரசியல் நிலவரம் வெறுப்பையே ஏற்படுத்துகிறது

## சுமந்திரன் எம்.பி.கவலை



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களை வாங்கும் தற்போதைய நிலை வெறுப்பை ஏற்படுத்துகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை அடுத்து கொழும்பு அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும், அவை எதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ள விரும்பவில்லை.

என்ன நடக்கப் போகிறது என்று எமக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

ஆட்சி அமைக்கும் ஆற்றல் யாருக்கு இருக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு காத்திருக்கின்றோம்.

கட்சி தாவல்களை மேற்கொள்வதற்காக பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அந்தவகைய செயற்பாடுகளில் ஈடுபட நாம் விரும்பவில்லை.

எமது முடிவு கொள்கையின் அடிப்படையிலானது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# மைத்திரி -ரணில் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவர்

## வாசு எம்.பி. திடீர் மனமாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவார்கள் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பலவீனம் காரணமாக சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிர்காலத்தில் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பொய் நாடகம் ஒன்றே அரங்கேற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாததால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பேராபத்து

## பழநெடுமாறன் எச்சரிக்கை

(சென்னை)

2009ஆம் அண்டு மே மாதம் 17ஆம் திகதி விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை மௌனித்தார்கள்.

ஆயுதங்களை மௌனிக்கின்றோம் என்று சொன்னார்களே தவிர ஆயுதங்களை கீழே வைக்கின்றோம் என்று கூறவில்லை என பழநெடுமாறன் தெரிவித்தார்.

மே 17 இயக்கம் சார்பில் தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அண்ணா அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சொல்லும் சொல்லின் உண்மை அறிந்து சொல்லக்கூடியவர். இதனால் தான் ஆயுதங்களை மௌனிக்கின்றோம் என்று சொன்னார்.



அதன் விளைவு தற்போது என்னானது? விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் அந்நிய வல்லரசுகள் இலங்கைக்கு வரவில்லை. ஆனால் தற்போது இலங்கையில் ஆழமாக சீனா காலூன்றியதுடன், இந்து சமுத்திரம் சீனாவின் கட்டுப்பாட்டுக்கு போய் விட்டது.

இது இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அனைவரும் உணர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## ஸ்திரமான ஆட்சிக்கே ஆதரவு வழங்குவோம்

### மு.க.தலைவர் ஹக்கீம் உறுதி



(கொழும்பு)

பெரும்பான்மையுடன் கூடிய ஸ்திரமான ஆட்சிக்கே நாம் ஆதரவு வழங்குவோம். ஆகவே தேசிய தலைவர்கள் தேவையற்ற தீர்மானங்கள் எடுத்து மக்களின் ஆணையை மீறக் கூடாது. தேசிய அரசாங்கத்தை கொண்டு செல்லாமல் இடைக்கால அரசாங்கமொன்று நாட்டை நிர்வகிப்பது நல்லதல்ல. அது மக்களின் ஆணையை மீறும் செயலாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அத்துடன் புதிய தேர்தல் முறைமைக்கு அங்கீகாரம் வழங்கியமைக்கும் நாம் அனைவரும் பொறுப்பு கூற வேண்டும். ஆகவே மீண்டும் நாம் பழைய தேர்தல் முறைமைக்கு செல்ல வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## 8 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இந் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட் தொகையுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் பிற்பகல் சிங்கப்பூரில் இருந்து குறித்த சிகரெட் தொகையை கொண்டு வந்துள்ளதாக சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் கொழும்பு - கிராண்ட்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகை அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## மகிந்த தலைமையிலானவர்கள் விடுக்கும் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்

### சோசலிச மக்கள் முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுக்கு அமைய மக்கள் ஆட்சி மாற்றம் தேவை என கருதுவதாக சோசலிச மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று அந்த முன்னணி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா கொலுரே இதனைத் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றம் தேவை என்ற மக்களின் கோரிக்கையை தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நிறைவேற்ற முடியாது போயுள்ளது.

குறிப்பாக 19வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் மூலம் தடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் தேவைக்காக அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தினை புகுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 2001ஆம்ஆண்டு முதல்2004ஆம்ஆண்டுவரை பிரதமராக பதவி வகித்த போது அவரது பதவியை தற்காத்து கொள்ள முடிய வில்லை.

இதனால், பதவியை தக்கவைக்க இருக்கும் தடையை நீக்கிக்கொள்ளும் வகையில் அதற்கு ஏதுவான பந்திகளை 19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கியுள்ளார்.

இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது போனால், ஆட்சி மாற்றம் தேவை என்ற மக்களின் கோரிக்கை அதிகரித்து உக்கிரமடைந்தால், அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டாவது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்த நிலைமையில், மகிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டு எதிர்க்கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவற்றின் கோரிக்கையை கவனத்தில் கொண்டு உடனடியாக அரசியலமைப்புச் சட்டத்திற்கு அப்பால் சென்றாவது பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் எனவும் ராஜா கொலுரே மேலும் தெரிவித்தார். (இ-10)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி மி.விமலநாதன் த்லைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை அதிபர் திருமதி கிருபாஹரி இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) சண்தயாளன், திருமதி ரோகினி தயாளன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ். இந்துமகளிர் கல்லூரியின் இளைப்பாறிய உதவி அதிபர் திருமதி சசிகலா சிவநாதனும் கலந்து கொள்வார். (இ)

## ஏறாவூர் நகரசபைக்கு சுழற்சி முறையில் உறுப்பினர்களை நியமிக்க ஆலோசனை

(ஏறாவூர்)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி ஏறாவூர் நகர சபையில் பெற்றுக்கொண்ட இரண்டு போனஸ் ஆசனங்களுக்கும் பொதுப் பட்டியலில் இருந்து உறுப்பி னர்களை சுழற்சி முறையில் நியமனம் செய்ய ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஏறாவூர் மத்திய குழு தெரிவித்துள்ளது.

சு.கட்சியின் ஏறாவூர் மத்திய குழு ஊடாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.சுபைர் நேற்று இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏறாவூர் மத்திய குழு ஊடாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் ஆலோசனையில் ஜனாதிபதி மற்றும் கட்சியின் உயர்மட்டம் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் ஏறாவூர் நகர சபையில் கிடைக்கப் பெற்றுள்ள மேலதிக இரண்டு போனஸ் ஆசனங்களையும் குறித்த உறுப்பினர்கள் மத்தியில் சுழற்சி முறையில் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதில் முதலாவது ஆசனத்தை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய வேட்பாளர்கள் மத்தியில் வட்டார ரீதியாக பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை ஒழுங்கின் அடிப்படையில் வழங்குவது என்றும், இரண்டாவது ஆசனத்தை பொதுப் பட்டியல் நியமனத்திற்காக ஏற்கனவே வேட்பு மனுப்பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு சுழற்சி முறையாக வழங்குவது எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் ஒன்றிணைய வேண்டும் - மாஹீர்

(ஏறாவூர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை விட்டுப் பிரிந்து சென்ற அதன் போராளிகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் இதுபோன்ற பல தீர்மானங்களுடன் ஏறாவூர் அஷ் - ஷஹீத் எம்.எச்.எம்.அஷ்ரப் பௌண்டேஷன் புனரமைக்கப்பட்டுள்ளது என அதன் செயலாளர் எம்.ஐ. எம். மாஹீர் தெரிவித்தார்.

அஷ்ரப் பௌண்டேஷன் எனும் அமைப்பின் புனரமைப்புக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏறாவூரில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



"முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் போராளிகள் மற்றும் புத்திஜீவிகள் முன்னிலையில் இந்த அமைப்பு மறுசீரமைக்கப்பட்டு புதிய பொது நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் காட்டித் தந்த வழியில் ஏறாவூரின் எதிர்கால அரசியல் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் ஒருமித்து இயங்குதல், பக்கச்சார்பின்றி தூய்மையான இஸ்லாமிய அரசியல் கலாசாரத்தினை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளல், மறைந்த தலைவரின் ஞாபகார்த்தமாக ஏறாவூரில் ஒரு கிராமத்திற்கு மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் மாவத்தை எனப் பெயரிடல், ஏறாவூரிலுள்ள ஸக்காத் கிராமத்திற்கு 1300 மீற்றர் நீளமுடைய கொங்கிரீற் வீதி அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல், உள்ளிட்ட பல சமூக அரசியல், கலாசார, நலன்புரி அபிவிருத்தித் திட்டங்களுக்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார். (இ-10)

# பாரதம்

## என் கொள்கையில் திராவிடம் இருக்கும்; கருணாநிதியை சந்தித்த பின் கமல் பேட்டி!



(சென்னை)

சென்னை கோபாலபுரத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்தித்த நடிகர் கமல்ஹாசன், என் கொள்கையில் திராவிடம் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவிற்கு பின்னர் நடிகர் கமலும், ரஜினியும் அரசியலுக்கு வரும் முனைப்பில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இதற்காக நடிகர் கமல் நாளை 21 முதல் இராமேஸ்வரத்தில் ஆரம்பித்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினமே தன்னுடைய கட்சியின் பெயரையும், நிர்வாகிகள் குறித்து அறிவிக்கவுள்ளனர். இப்பயணத்தின் முதற்கட்ட நிறைவாக மதுரையில் மிகப் பெரிய அளவில் மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இதற்காக அழைப்பு விடுக்கும் விதமாகவும், மரியாதை நிமித்தமாகவும் பல்வேறு மூத்த அரசியல் தலைவர்களைச் சந்தித்து வருகிறார். அந்த வகையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியை கோபாலபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை நடிகர் கமல்ஹாசன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நான் செல்லும் பாதையை தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் சொல்ல வந்தேன். கருணாநிதியின் அறிவுக் கூர்மை, தமிழ், மக்கள்பால் உள்ள அக்கறை மூன்றையும் அவரிடம் கற்க விரும்புகிறேன். மேலும், தன் கொள்கையில் திராவிடம் இருக்கும் எனவும் கமல் தெரிவித்தார். (இ-10)

## சுவாங்கிராய்க்கு ஜனாதிபதி அஞ்சலி

சிம்பாவேயின் எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் சுவாங்கிராயின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய சிம்பாவே ஜனாதிபதி எம்மெர்சன் மனங்காகுவா, மோர்கன் சுவாங்கிராயின் மறைவையிட்டு அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார்.

மறைந்த தலைவர் மோர்கன் சுவாங்கிராயின் வீட்டுக்கு நேற்று முன்தினம்சென்ற ஜனாதிபதி மனங்காகுவா, அவரது குடும்பத்தினருடன் கலந்துரையாடியபோது, தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, மோர்கன் சுவாங்கிராயின் மறைவையிட்டு துக்கம் அனுஷ்டிக்க ஒன்றிணையுமாறு நாட்டு மக்களிடம் ஜனாதிபதியும் துணை ஜனாதிபதிகள் இருவரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.



கடந்த 2016ஆம் ஆண்டு ஜீன் மாதம் முதல் பெருங்குடல் புற்றுநோயினால் அவதியுற்றுவந்த 65 வயதான மோர்கன் சுவாங்கிராய், தென்னாபிரிக்காவிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், இம்மாதம் 14 ஆம் திகதி காலமானார்.

இவரது உடல் தென்னாபிரிக்காவிலிருந்து சிம்பாவேக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், இன்று செவ்வாய்க்கிழமை இறுதிக்கிரியை நடைபெறவுள்ளதாக அவரது மகன் எட்வின் சுவாங்கிராய் அறிவித்துள்ளார். (இ-10)

## மக்கள் தொகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரி வழக்கு

(டில்லி)

மக்கள் தொகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி உச்ச நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டது. விரைவில் அது விசாரணைக்கு வருகிறது.

இந்தியாவில் மக்கள் தொகை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு படி 36 கோடியே 10 இலட்சமாக இருந்தது. இது 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்போது 121 கோடியாக உயர்ந்தது.

நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி மக்கள் தொகை மேலும் அதிகரித்து 129 கோடியே 14 இலட்சத்து 86 ஆயிரத்தை கடந்து விட்டது.

இதே வளர்ச்சி வேகத்தில் மக்கள் தொகை சென்று கொண்டு இருந்தால் 2022 ஆம் ஆண்டில் 150 கோடியை கடந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தொகை தொடர்ந்து ஏறுமுகம் காண்பதால் உள் கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருவதில் சிக்கல்கள் ஏற்படும்.

### பொதுநல வழக்குகள்

இந்த நிலையில் மக்கள் தொகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரி உச்ச நீதிமன்றில் அனுஜ் சக்சேனா, பிரத்வி ராஜ் சவுகான், பிரியா சர்மா ஆகிய 3 சட்டத்தரணிகள் தனித்தனியே பொது நல வழக்குகளை தொடுத்துள்ளனர்.

அவற்றில் அவர்கள் மக்கள் தொகை வளர்ச்சிவீதம் பற்றி கவலை தெரிவித்து உள்ளனர்.

### ஒரு தம்பதிக்கு 2 குழந்தைகள்

மேலும், ஒரு தம்பதிக்கு 2 குழந்தைகள் என்ற கொள்கையை ஊக்குவித்து பரிசு அளிக்கவும், 2 குழந்தைகளுக்கு அதிகமாக பெற்றுக் கொள்கிறவர்களைத் தண்டிக்க ஏற்ற வகையிலும் கொள்கைகளை இயற்றி நடைமுறைப்படுத்துமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், உலகிலேயே இந்தியாவில்தான் மிக அதிக அளவில் இளம் வயதினர் உள்ளனர்.

ஆனால் மக்கள் தொகை வேகமாக வளர்ச்சி கண்டு வருவதால் அது வேலை இல்லாத் திண்டாட்டத்துக்கு வழி வகுக்கும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### விரைவில் விசாரணை

இந்த வழக்குகள் உச்ச நீதிமன்றில் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளன.

ஏற்கனவே கடந்த 12 ஆம் திகதி உச்ச நீதிமன்றில் அனுபம் பாஜ்பாய் என்பவரும் மக்கள் தொகையினால் கட்டுப்பாட்டுக்குள் உள்ள இயற்கை வளங்கள் மீது மேலும் சுமை ஏறுவதாகவும், தொடர்ச்சியான சீரழிவுக்கு வழிவகுத்து வருவதாகவும் கூறி ஒரு வழக்கு தொடர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அமெரிக்காவில் துப்பாக்கிச... மத்திய புலனாய்... ஜனாதிபதி ட்ரம்ப் ...



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம், பார்க்லேண்ட் பாடசாலையில் கடந்த 14 ஆம் திகதி நடந்த துப்பாக்கிச்சூட்டில் 17 பேர் உயிரிழந்த சம்பவம், அந்த நாட்டையே உலுக்கியது.

துப்பாக்கிச்சூடு ந... நிக்கோலஸ் குரூ... இணையதளத்தில்... தகவல் மத்திய பு... கவனத்துக்கு கொ... லும், அவரை கை... தடுத்து நிறுத்த மத்... விட்டது.

இதனால் அத... வேண்டும் என பு... ரிக் ஸ்காட் வலியு...

இந்த விடயத்... படையின் தோல்... ட்ரம்ப் கண்டித்துள்...

இதுபற்றி டுவிட்...

புளோரிடா பா... பவத்தில், சம்பந்...

## பாகிஸ்தானில் இந்தியப் பிரதமர் மோடியின் விமானம் தரையிறங்கியதற்கு 2.86 இலட்சம் ரூபா கட்டணம்

(டில்லி)

பாகிஸ்தானில் இந்தியப் பிரதமர் மோடியின் விமானம் தரை இறங்கியதற்காக பாகிஸ்தான் அரசு ரூ.2.86 இலட்சம் கட்டணம் விதித்துள்ளது. இந்தக் கட்டண செலவுகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் ஏற்கவுள்ளது.

பிரதமர் மோடி கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை ரஷ்யா, ஆப்கானிஸ்தான், ஈரான், கட்டார் ஆகிய நாடுகளுக்கு செல்லும்போது பாகிஸ்தானில் லாகூர் நகரில் தரை இறங்கி விட்டு பின்னர் புறப்பட்டுச் சென்றார்.

இவ்வாறு அவர் தரை இறங்கிச் சென்றதற்காக இந்தியாவுக்கு பாகிஸ்தான் அரசு ரூ.2.86 இலட்சம் கட்டணம் விதித்துள்ளது.



2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி ரஷ்யாவில் இருந்து ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியா திரும்பிக் கொண்டு இருந்தபோது லாகூரில் தரை இறங்கி பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டார். இதற்காக பாகிஸ்தான் ரூ.1.49 இலட்சம் கட்டணம் விதித்துள்ளது.

இதேபோல் கடந்த 2016 ஆம் ஆண்டு மே மாதம் ஈரான் சென்றபோது லாகூரில் மோடியின் விமானம் தரை இறங்கியதற்கு ரூ.77,215உம், அதே ஆண்டு ஜீன் மாதம் கட்டார் சென்ற போது ரூ.59,215 உம் பாகிஸ்தான் கட்டணம் விதித்துள்ளது.

இருமுறை இவ்வாறு தரை இறங்கியதற்காக பாகிஸ்தான் அரசு மொத்தம் ரூ. 2.86 இலட்சம் கட்டணம் விதித்துள்ளது. இந்த கட்டண செலவுகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் ஏற்கவுள்ளது. டில்லியைச் சேர்ந்த லோகேஷ் பத்ரா என்ற தன்னார்வலர் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் இந்த தகவல்களை சேகரித்துள்ளார். (இ-10)

## தீவிரவாதிகள் துப்பாக்... மேகாலயா வேட்பா...

(சிலாங்)

மேகாலயாவில் பிரசார கூட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலில் தேசியவாத காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஜொனதன் சங்மா உயிரிழந்தார்.

திரிபுரா, மேகாலயா, நாகலாந்து ஆகிய 3 மாநில சட்டசபைக்கு அண்மையில் தேர்தல் அறிவிக்கப்பட்டது. திரிபுராவில் எதிர்வரும் 28 ஆம் திகதியும், மேகாலயா மற்றும் நாகலாந்தில் எதிர்வரும் 27 ஆம் திகதியும் தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மார்ச் 3 ஆம் திகதி நடக்கிறது.

இத்தேர்தலுக்கான வாக்குச் சேகரிப்பில் அனைத்துக்கட்சி வேட்பாளர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், துரா சட்டமன்ற தொகுதிக்கான தேசியவாத காங்கிரஸ்கட்சிவேட்பாளரான ஜொனதன் சங்மா, கிழக்கு காரோ மலைப்பகுதியில் நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டார்.



அப்போது திடீரென பயங்கர சத்தத்துடன் ஒரு வெடி குண்டு வெடித்தது. இதனால் அங்கிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அப்போது சில தீவிரவாதிகள் பொதுமக்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் ஜொனதன் சங்மா உட்பட இரண்டு பேர் படுகாயமடைந்தனர். உடனடியாக அவர்களை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு

# வெளிநாடு

# மாலைதீவில் மீண்டும் அவசரகால நிலை
# நாடாளுமன்றில் பிரேரணை சமர்ப்பிப்பு



(மாலே)

அண்மைக்காலமாக மாலைதீவில் நிலவிவரும் அரசியல் பதற்றத்துக்கு மத்தியில், அவசரகால நிலைமையை மேலும் 30 நாட்களுக்கு நீடிக்கக் கோரி ஜனாதிபதி அப்துல் யமீன், நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றை நேற்று திங்கட்கிழமை சமர்ப்பித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பேரில், கடந்த 2015ஆம் ஆண்டு 13 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா நஷீட்டை பயங்கரவாதக் குற்றச்சாட்டிலிருந்து மாலைதீவு உச்ச நீதிமன்றம் விடுவித்ததுடன், சிறையிலுள்ள 9 அரசியல் தலைவர்களையும் விடுதலை செய்யுமாறும் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மாலைதீவில் அரசியல் பதற்ற நிலைமை இம்மாத முற்பகுதியிலிருந்து ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மாலைதீவு அரசாங்கம் மதித்து நடக்காத நிலையில், 9 அரசியல் தலைவர்களையும் விடுதலை செய்ய மறுத்ததுடன், ஏற்கனவே 15 நாட்களுக்கு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியிருந்தது. இந்தக் காலஅவகாசம் முடிந்த நிலையில், மாலைதீவில் மீண்டும் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்த மாலைதீவு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மவுமூன் அப்துல்லா கையூம் மற்றும் அந்நாட்டுப் பிரதம நீதியரசரும், நீதிபதியொருவரும் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, சிறையிலுள்ள 9 அரசியல் தலைவர்களையும் விடுதலை செய்யுமாறு உச்ச நீதிமன்றம் விடுத்த உத்தரவை மீளப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

ந்சலி



ம் முதல்
றுவந்த
், தென்
சியசாலை
லையில்,
.
விலிருந்து
லையில்.
க்கிரியை
எட்வின்
(இ-10)

# சவுதியில் பெண்கள் தொழில் தொடங்க
# கணவரின் அனுமதி தேவையில்லை



(றியாத்)

சவுதி அரேபியாவில் பெண்கள் சுயமாக தொழில் தொடங்க கணவரின் அனுமதி தேவையில்லை என அந்நாட்டின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் பட்டத்து இளவரசராக முகமது பின் சல்மான் பதவி ஏற்றதில் இருந்து அங்கு பல சமூக நல சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறார்.

'விஷன் 2030' என்ற மறுசீரமைப்பு திட்டத்தில் பெண்களின் பங்கை மூன்றில் 2 பங்காக உயர்த்த திட்டமிட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து பல்லாண்டுகளாக பெண்கள் வாகனம் செலுத்த விதிக்கப்பட்டிருந்த தடை அண்மையில் நீக்கப்பட்டது. திரையரங்குகள் திறக்கப்பட்டன. பெண்கள் கால்பந்து போட்டிகளை நேரில் கண்டு களிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இதுபோன்ற பெண்களுக்கு பல்வேறு சலுகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மேலும் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சவுதி அரேபியாவில் பெண்கள் தொழில் தொடங்க ஆண் பாதுகாவலர் அனுமதி பெற வேண்டும். அதாவது கணவர், தந்தை அல்லது சகோதரன் அனுமதி கடிதத்தை விண்ணப்பத்தில் இணைக்க வேண்டும்.

தற்போது பெண்கள் தொழில் தொடங்க இத்தகைய அனுமதி கடிதம் தேவையில்லை. பெண்கள் சுயமாக தொழில் தொடங்க எந்தத் தடையும் இல்லை என சவுதி அரேபியாவின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இதன் மூலம் சவுதி அரேபியாவில் தனியார் துறைகளை அதிகரித்து பொருளாதார சீழிவை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-10

# க்கிச்சூட்டில் 17 பேர் பலி!
# ய்வு படை மீது
# ப் கடும் விசனம்

பாக்கிச்சூடு நடத்திய முன்னாள் மாணவர்
ாலஸ் குரூஸ். இது தொடர்பாக யு டியூப்
ளயதளத்தில் பதிவு செய்து. அதுபற்றிய
மத்திய புலனாய்வு படை (எப்.பி.ஐ.)
துக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனா
வரை கண்டுபிடித்து இந்த தாக்குதலை
நிறுத்த மத்திய புலனாய்வு படை தவறி
னால் அதன் இயக்குநர் பதவி விலக
டும் என புளோரிடா மாகாண ஆளுநர்
ாட் வலியுறுத்தினார்.
த விடயத்தில், மத்திய புலனாய்வு
ன் தோல்வியை அமெரிக்க ஜனாதிபதி
கண்டித்துள்ளார்.
பற்றி டுவிட்டரில் பதிவிட்டுள்ள ட்ரம்ப்,
ளாரிடா பாடசாலை துப்பாக்கிச்சூடு சம
ில், சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து

எத்தனையோ சமிக்ஞைகள் வந்தும்கூட, மத்திய புலனாய்வுப் படையினர் கோட்டைவிட்டது மிகுந்த வருத்தம் தருகிறது. இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்ய தலையீடு தொடர்பான குற்றச்சாட்டு மீதான விசாரணையில், குற்றச்சாட்டை நிரூபிப்பதற்காக மிகக் கூடுதலான நேரத்தை செலவு செய்கிறீர்கள். அதில் எந்த தலையீடும் கிடையாது. செய்ய வேண்டிய அடிப்படை பணிகளை மீண்டும் செய்து எங்களை பெருமிதம் அடையச் செய்யுங்கள் எனத் தெரிவித்துள்ளார். (இ-10)

துருக்கியை எதிர்கொள்ள

# சிரியா அரசாங்கத்துடன் போராளிகள் ஒப்பந்தம்

குர்து போராளிகளும், சிரியா அரசாங்கமும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தால் துருக்கியை எதிர்கொள்ள ஆப்ரின் பகுதிக்கு சிரியாவின் அரசுப் படைகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிரியாவின் வடகிழக்கு பகுதியில் குர்திஷ் தீவிரவாத படையினரின் ஆதிக்கம் நிறைந்த குவாமிஷ்லி நகரில் கார் ஒன்றில் இருந்த வெடிகுண்டு வெடித்தது. இந்த தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது என உடனடியாக தெரியவரவில்லை.

இந்த சம்பவத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் காயமடைந்தனர். குவாமிஷ்லி நகர் அமைந்த ஹசாகே மாகாணம் உட்பட வடகிழக்கு சிரிய பகுதிகளை குர்திஷ் தீவிரவாத படையினர் தங்களது கட்டுக்குள் வைத்திருக்கின்றனர்.

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள செய்தியில், இந்நகரை இலக்காக கொண்டு கடைசியாக கடந்த செப்டெம்பர் மாதம் தாக்குதல் நடந்தது. அதில், மோட்டார் சைக்கிள் ஒன்றை வெடிக்கச் செய்ததில் ஒரு குழந்தை பலியானது. பலர் காயமடைந்தனர் என தெரிவித்துள்ளது.

சிரியாவின் ஆப்ரின் பிராந்தியத்தை கட்டுப்பாட்டில் வைத்துள்ள குர்துப் போராளிகள் மீது துருக்கி தாக்குதல் தொடுத்து வருகிறது. இந்நிலையில் துருக்கியின் தாக்குதலை எதிர்கொள்ள தங்கள் நாட்டு அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக குர்துப் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கியின் எல்லையை ஒட்டி இருக்கிறது ஆப்ரின். இப்பகுதியில் தற்போது சிரியாவின் அரசுப் படைகள் ஏதுமில்லை. தற்போது போராளிகளும், அரசும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தால் துருக்கியை எதிர்கொள்ள ஆப்ரின் பகுதிக்கு சிரியாவின் அரசுப் படைகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சில நாட்களில் அரசுப் படையினர் ஆப்ரின் பகுதிக்குள் வருவர் என்றும், எல்லைப் பகுதியை ஒட்டி சில நிலைகளை அவர்கள் அமைப்பார்கள் என்றும் குர்துப் படை அதிகாரி பார்தன்ஜியா குர்த் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். (இ-10)

# சிரியாவில் கார் வெடிகுண்டு
# தாக்குதலில் 5 பேர் உயிரிழப்பு



(பெய்ரூட்)

சிரியா நாட்டின் வடகிழக்கு பகுதியிலுள்ள குவாமிஷ்லி நகரில் நடத்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்தனர்.

சிரியா நாட்டின் வடகிழக்கு பகுதியில் குர்திஷ் போராளிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இப்பகுதியில் உள்ள நகரங்களை குர்திஷ் போராளிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அவர்களை எதிர்த்து சிரியா அரசு இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அதேசமயம் ஐ.எஸ். தீவிரவாதிகள், இந்த இரு தரப்பினர் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் குர்திஷ் போராளிகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் குவாமிஷ்லி நகரில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் ஐந்து பேர் உடல் சிதறி உயிரிழந்ததாகவும், மேலும் ஏழு பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்நாட்டில் இயங்கி வரும் பிரிட்டனை சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடைசியாக கடந்த செப்டெம்பர் மாதம் இந்நகரில் நடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் வெடிகுண்டு தாக்குதலில் ஒரு குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ாக்கிச்சூடு:
# ாளர் பலி!



கொண்டு சென்றனர்.

ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி மூன்று பேரும் உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தீவிரவாதிகளின் துப்பாக்கிச்சூடு தாக்குதலில் வேட்பாளர் உட்பட மூன்று பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

# நாடு முற்றிலும் ஸ்தம்பிதம்

## மகிந்த ராஜபக்ஷ விசனம்

(கொழும்பு)

நாடு முற்றிலும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று நாட்டின் தற்போதைய அரசியல் பின்னணி குறித்து கேள்வி எழுப்பிய போது அதற்கு பதிலளிக் கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து ஒரு வார காலம் கடந்துள்ள நிலையிலும், இன்னும் கயிறு இழுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டு மக்கள் என்ன நேர்கின்றது என்பதனை அவதானித்து வருகின்றனர். நாட்டில் இன்று அரசாங்கமொன்று உள்ளதா? என்பதே தெரியவில்லை.

பிரதமர் பதவி பற்றி பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. இவர்கள் உண்மையில் என்ன செய்கின்றார்கள்.

சட்ட மூலங்கள் அமுலாக்கப்பட்டுள்ள விதத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சம்பளத்திற்கு வேலை செய்யாது அதனை கௌரவ சேவையாகக் கருதி செயற்படுமாறு உறுப்பினர்களிடம் அரசாங்கம் கோரியுள்ளது.

அவ்வாறு செய்வதென்றால் அமைச்சரவை அமைச்சர்களும் சம்பளம் இன்றி கௌரவ சேவையாற்ற வேண்டுமென உள்ளூராட்சி மன்ற ஒன்றியம் கோரியுள்ளது. அவர்கள் கூறுவதிலும் உண்மையில்லாமலில்லை.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெறும் பேச்சில் மட்டுமேயாகும்.

அனைத்து பக்கங்களிலும் அடிபடுவது அப்பாவி மக்கள் மட்டுமே என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஐ.ம.சு.கூட்டமைப்பில் பிரதமர் பதவிக்கு இருமுனைப் போட்டி-சுசிலும் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பிரதமர் பதவிக்கு இருமுனைப் போட்டி நிலவி வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பிரதமர் பதவிக்காக முன்னதாக நிமால் சிறிபால டி சில்வாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

தற்போது பிரதமர் பதவிக்கு சுசில் பிரேமஜெயந்தவின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.



புதிய அமைச்சரவையின் சில பதவிகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சராக ஜோன் செனவிரட்ன, அரச நிர்வாக அமைச்சராக சரத் அமுனுகம ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தேசிய அரசாங்கம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை காலாவதியாகியுள்ள நிலையில், அரசியல் அமைப்பின் 19ம் திருத்தச் சட்டத்தின் 40சீ சரத்தின் அடிப்படையில் புதிய பிரதமர், புதிய அமைச்சரவையை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் அமைப்பதில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நேரடி பங்களிப்பினை வழங்கப் போவதில்லை.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை பலத்தை மலினப்படுத்துவதற்கு பொதுஜன முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து துமிந்த திஸாநாயக்கவை நீக்குமாறு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# கனடா செல்ல முயற்சித்த இலங்கையர் நாடு கடத்தல்

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டினைப் பயன்படுத்தி கனடா செல்ல முயற்சித்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

கட்டார் விமான நிலையம் ஊடாக கனடா செல்ல முயற்சித்த குறித்த இலங்கையர் விமான நிலைய அதிகாரிகளால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

நாடு கடத்தப்பட்ட இலங்கையரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் மினுவாங்கொட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இன்று 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தின் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்தை சேர்ந்த சரவணமுத்து தங்கவேல் என்ற 62 வயதுடைய நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு போலிக் கடவுச்சீட்டு தயாரிப்பதற்கு உதவிய நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய குற்ற விசாரணைப் பிரிவு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

# மைத்திரியால் ரணில் மகிழ்ச்சி

(கொழும்பு)

தனது பதவியில் தொடர்ந்தும் நீடிக்க ஜனாதிபதி வாய்ப்பு வழங்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிரதமர் பதவியில் மாற்றம் மேற்கொள்ளாமல் தொடர்ந்து அரசாங்கத்தை முன்னெடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது ரணில் இந்தத் தகவலை வெளியிட்டதாக அந்தக் கட்சியை சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையை சபாநாயகர் சமரசப்படுத்தும் முயற்சியில் வெற்றி கண்டதாக பிரதமர் தெரிவித்தார்.

எனினும் அரசாங்கம் மற்றும் கட்சியை மீள் திருத்தம் செய்யும் நடவடிக்கை 3 மாதங்களுக்குள் மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் அழுத்தமாக குறிப்



பிட்டதாக, குறித்த உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### அர்த்தமற்ற பரிசுகள்

சட்சட் என்று பெரிய பெரிய முடிவுகளை எடுப்பவர்கள் கூட அந்தத் திருமணத்திற்கு என்ன தருவது? இந்த கிரகப் பிரவேசத்திற்கு என்ன அன்பளிப்புச் செய்வது? என்றெல்லாம் குழம்புவதைப் பார்க்கிறோம்.

என் நண்பர் போன் செய்தார். கெட்டிக்காரர். நான் வியக்கும் மனிதர். அவர் கேட்ட விடயம் " என் உறவினர் வீட்டுத் திருமணம். என்ன பரிசளிப்பது என்றே தெரியவில்லை. நீ ஒரு யோசனை சொல்லேன்! "

என்ன பட்ஜெட் என்றேன். 200 ரூபாய்! என்றார் 201 ரூபாயைக் கவரில் போட்டுக் கொடுத்துவிடு என்றேன். அவருக்கு ஆச்சரியம் என்ன இப்படிச் சொல்லி விட்டாய் என்றார்.

பின் என்ன? ஒரு திருமணம் நடந்து முடிந்த வீட்டிற்கு மறுதினம் தற்செயலாகச் செல்ல நேர்ந்தது. எல்லோரும் திருமணப் பரிசுகளைப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏகமாய் விமர்சனங்கள் கேலிகள்.

"இந்த ஆளுக்கு என்ன கேடு ? நல்லாத் தரலாம்ல? பெரிசா இந்தப் பிளாஸ்டிக் பொருளைத் தூக்கிக்கிட்டு வந்துட்டான் பாரு!" என்று ஒருவர்.

"இங்க பாரு! நம்ம மணி தந்திருக்கிறதை. ஒண்ணுத்துக்கும் ஆகாத பிளவர் வாஸ்? பேப்பரைச் சுத்தித் தூக்கித் தூக்கிப் பரண்ல போடு அதை!"

சில பணக்கார வீடுகளில் பார்த்தால் இன்னும் பரிதாபம். 15 சுவர்க் கடிகாரங்கள், 20டீ செட்டுக்கள், 25 கலைப் பொருள்கள். என்ன செய்வது இவற்றையெல்லாம்? எல்லாம் பரணுக்கே அர்ப்பணம்.

பரிசுகள் வேண்டாம் என்று அழைப்பிதழில் அச்சிட்டாலும் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்கள். இவர்களைத் திருத்த முடியுமா என்ன?

நெருக்கம் இருந்தால் அவர்களையே கேட்கலாம் உனக்கு இன்ன ரூபாயில் என்ன தேவை என்று. ஓரளவு நெருக்கம் மட்டும் இருந்தால் அவர்களது ரசனை என்ன மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு அதன் பிறகு வாங்கலாம்.

முன் பின் தெரியாதவர்களாக இருந்தால் அவர்கள் நிச்சயம் பயன்படுத்தியே தீர வேண்டும் என்று சொல்லக் கூடிய அத்தியாவசிய அன்றாடப் பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும்.

விசேடங்களுக்குப் பரிசளிப்பது என்பது ஓர் இனிமையான விடயம் . அதை நாமும் கசப்பாக்கிக் கொண்டு மற்ற வர்களையும் முகம் சுளிக்க வைத்து விடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# பிரதமரை விலகுமாறு நான் கூறவில்லை

## ஹர்ஷ டி சில்வா மறுப்பு

Harsha de Silva
@HarshadeSilvaMP
Following

True I spoke on need f changes in @officialunp leadership structure but it is NOT true I asked @RW_UNP to step down as PM. @TimesOnlineLK.

11:54 PM - 17 Feb 2018



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டும் எனத் தான் கூறவில்லை என பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ கட்டமைப்பில் மாற்றம் இடம் பெறவேண்டும்எனத்தான்கூறியது உண்மை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஆறு மாதங்களுக்குள் தண்டனை வழங்குவேன்

## சட்டம் ஒழுங்கு அமைச்சைக் கோரும் சரத் உறுதி



(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சை தன்னிடம் ஒப்படைத்தால் ஆறு மாதங்களுக்குள் தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவேன் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் சிறிகொத்தா தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

குற்றவாளிகளை தண்டிக்க அரசாங்கம் கடந்த காலத்தில் தவறியதனாலேயே மக்கள் தேர்தலில் இவ்வாறு பாடம் புகட்டியுள்ளனர். தனக்கு சம்பந்தப்பட்ட அமைச்சை வழங்கினால் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தம்பர அமில தேரரும் சட்டம் ஒழுங்கு அமைச்சுக்கு மிகவும் தகுதியானவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாதான் என ஊடகங்களிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கடலில் மூழ்கி மாணவன் பலி!



(ஏறாவூர்)

ஏறாவூர், களுவங்கேணி கடலில் மூழ்கிய நிலையில் மாணவன் ஒருவரின் சடலத்தை தாம் மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நண்பர்களுடன் சேர்ந்து இம்மாணவன் கடலில் குளிக்க சென்ற வேளையிலேயே கடலலையால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் மூழ்கி மரணமாகியுள்ளார். ராஜா டென்வர் கிருபா (வயது-16) என்ற மாணவனின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. (இ)

# குவைத்திலிருந்து 4ஆயிரம் இலங்கைப் பணியாளர்கள் அழைத்து வரப்படவுள்ளனர்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தகவல்

(குவைத்)

சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியிருந்த சுமார் 4 ஆயிரம் இலங்கை பணியாளர்கள் மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் பெப்ரவரி 22 ஆம் திகதிவரையான காலப் பகுதியை குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு தண்டனையின்றி நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் 15 ஆயிரத்து 447 பேர் சட்டவிரோதமாக தங்கியுள்ளதாக நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இந்த நிலையில் நாளை மறுதினம் 22 ஆம் திகதிக்கு முன்னர் குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்களை, நாட்டுக்கு அழைத்துவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

# ராஜபக்ஷ தரப்பினரை பதற்றமடைய செய்துள்ள பீல்ட்மார்ஷல் பொன்சேகா

(கொழும்பு)

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு பதவியை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் காரணமாக மகிந்த தரப்பினர் மற்றும் அரசாங்கத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ள நபர்கள் பதற்றமடைந்துள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஊழல், மோசடியாளர்கள், கொலை குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் சமகால அரசாங்கம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு, நீதி அமைச்சு அதற்கு போதுமான முயற்சிகளை மேற்கொள்ளாத நிலையில், இறுதியாக நடந்த உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தியிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையில் சரத் பொன்சேகாவுக்கு அந்த பதவியை வழங்க தீர்மானித்தமை தொடர்பில் மகிந்த தரப்பினர் பதற்றமடைந்துள்ளனர். இந்தத் தீர்மானத்தை மாற்றுவதற்கு அவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் தமக்கு எதிரான சக்தியாக சரத் பொன்சேகா வளர்ந்து விடுவார் என்ற அச்சம் காரணமாக, அவரை கைது செய்த ராஜபக்ஷ ரெஜிமென்ட் சிறையில் அடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அமைச்சர் மனோ கணேசன் வெட்கம்



(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாக தாம் வெட்கமும் கவலையும் அடைந்துள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களின் கருத்துக்களை தான் முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-10)

# மட்டு.மேல் நீதிமன்றில் பிள்ளையான் ஆஜர்



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐந்து பேரும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்றுக் காலை முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில், பிள்ளையான் உள்ளிட்டவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பான விசாரணை, நீதிபதி இஸ்ஸடீன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

அதன் பிரகாரம் பிள்ளையான் உட்பட ஐந்து சந்தேக நபர்களும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

கடந்த 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டிருந்தபோது ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம், இராணுவ புலனாய்வு உத்தியோகத்தரான எம். கலீல் ஆகியோர் கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அமெரிக்காவில் சாதனை படைத்த இலங்கையின் இளம் கண்டுபிடிப்பாளர்



(வோஷிங்டன்)

மட்டக்களப்பு - ஏறாவூர் நகரைச் சேர்ந்த மிருக வைத்தியரான சர்ஜீன் ஹாபிஸ் என்பவருக்கு அமெரிக்காவில் "இளம் ஆராய்ச்சியாளர்" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் ஓடாவியார் வீதியை வசிப்பிடமாக கொண்ட மிருக வைத்தியர் சர்ஜீன், தனது மேற்படிப்பை கனடாவிலிருக்கும் University of Calgary என்ற பல்கலைக்கழகத்தில் Phd in Virology தொடர்கிறார்.

இப் பல்லைக்கழகத்தில் உயர் கற்கை நெறியை மேற்கொள்ளும் இவர் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அதேவேளை கடந்த வாரம் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச விஞ்ஞான தொழில்நுட்ப மாநாட்டில் இவரால் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வ துறைசார்ந்த நிபுணத்துவ ஆராய்ச்சிகள் சமர்ப்பிக்கப்பட்டன.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் 394 புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் இவரது "இன்புளுவென்சா "H1N1 வைரஸ்" எனும் பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் சம்பந்தமான ஆய்வு இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

அக்கண்டுபிடிப்புத்தான் அம் மாநாட்டில் முதலிடத்தை பெற்றுக்கொண்டது.

அமெரிக்கா, லண்டன், இத்தாலி, கனடா, ஜப்பான், ஜேர்மனி, கொரியா, சீனா, எகிப்து, பிரான்ஸ், ஸ்பெயின், நியூசிலாந்து போன்ற பல்வேறு நாடுகளிலிருந்தும் கலந்து கொண்ட புதிய கண்டுபிடிப்பாளர் வரிசையில் இவர் இளம் கண்டுபிடிப்பாளர் என்ற கௌரவப்பட்டத்தோடு பணப்பரிசில்களும் வழங்கி பாராட்டப்பட்டார். (இ-10)

# எதற்காக புதிய பிரதமர்

## சபாநாயகர் கரு கேள்வி



(கொழும்பு)

பிரதமர் பதவிக்காக தான் ஒருபோதும் விண்ணப்பிக்கவில்லையென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்கனவே பிரதமர் ஒருவர் பதவியில் உள்ள போது, எதற்காக புதிய பிரதமர் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவை சந்தித்துள்ளதையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அத்தோடு, ரணில் பிரதமர் பதவியை துறந்து அதனை கருவிடம் கையளிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டதாக பரவலாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே கரு ஜெயசூரிய மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரியுடன் கருவும் ரணிலும் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின் போதும், ரணிலை பிரதமராகக்கொண்டு தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல கரு ஜெயசூரிய ஆலோசனை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இலங்கை இளைஞன் கின்னஸ் சாதனை





(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கின்னஸ் சாதனை ஒன்றை நிறைவு செய்துள்ளார்.

எவ்வித உதவியுமின்றி மோட்டார் சைக்கிளில் நின்று கொண்டே மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்து சாதனை செய்துள்ளார்.

இவர் அநுராதபுரத்திலிருந்து குருநாகல் நோக்கி பயணித்து கின்னஸ் சாதனை முயற்சியை நிறைவு செய்துள்ளார். கிட்டத்தட்ட 100 கிலோ மீற்றர் தூரம் பயணித்த இந்த இளைஞர் 23 வயதுடையவர்.

கொக்கரெல்ல, பொல்கொல்ல, ஆர். எம். தரிந்து இஷார அக்கலங்க மெட்டிகும்புரே என்பவரினால் இந்த சாதனை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி காலை 10.26 மணிக்கு அநுராதபுரம் இரண்டாம் மைல்கல் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயணம் குருநாகல், சாரகம ஏரிக்கு அருகில் நிறைவடைந்துள்ளது. சாதனை குறித்து தரிந்து கருத்து வெளியிடுகையில்,

“சிறு வயது முதல் மோட்டார் சைக்கிளில் பயணிக்க அதிக ஆர்வம் இருந்தது. ஒரு நாள் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது பொலிஸார் கைது செய்தனர்.

அன்று தான் இவ்வாறான சாதனை ஒன்றை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பொலிஸாருக்கு மிக்க நன்றி. அதனாலேயே இன்று இவ்வாறான சாதனையை நிகழ்த்த முடிந்தது. என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## வீரவன்சவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

சட்டபூர்வமான வருமானத்துக்கு மேலதிகமாக 75 மில்லியன் ரூபாய் சொத்துக்கள் சேர்த்துள்ளமை தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 16ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு சம்பவம் தொடர்பில் விமல் வீரவன்சவுக்கு குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நாட்டின் அரசியல் நெருக்கடிக்கு குறுகிய அரசியல் நோக்கமே காரணம்

### வியங்கொட விசனம்



(கொழும்பு)

நாட்டிற்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை, குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்களினால் ஊதிப் பெருக்கச் செய்யப்பட்டு வருவதாக பிரஜைகள் அமைப்பின் ஏற்பாட்டாளர் காமினி வியங்கொட தெரிவித்துள்ளார்.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல் பெறுபேறு, அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய சிவப்பு எச்சரிக்கை மாத்திரமே எனவும் அவர் தெரிவித்தார். நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-10)

## இலங்கை அமைதி காக்கும் படை லெபனான் நோக்கி பயணமானது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படைகளில் இணைந்து செயற்படுவதற்காக இலங்கை இராணுவத்தின் 12 ஆவது பாதுகாப்புப் படையணியினர் நேற்றுக் காலை லெபனான் நோக்கிப் பயணித்தனர்.



2 உயர்மட்ட அதிகாரிகளும் 14 ஏனைய தரநிலை அதிகாரிகள் உட்பட மொத்தமாக 150 பேர் இந்த படையணியில் உள்ளடங்குவதாக இராணுவ ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, 10 அதிகாரிகள் உட்பட 140 பேர் அமைதி காக்கும் பணிகளுக்காக லெபனானுக்கு சென்றுள்ள நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் ஆறாம் திகதி மற்றுமொரு குழு லெபனானுக்கு பயணிக்கவுள்ளது. (இ-10)

## கறுப்புக்கொடி போராட்டத்தில் ஒன்றிணைந்த தொழிற்சங்கம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கமானது, நேற்று முதல் தாம் கறுப்பு கொடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. மின்சார சபையில் பணி புரிந்த 6 பேருக்கு, பணித் தடை விதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே மேற்படி போராட்டமானது முன்னெடுக்கப்படுவதாக, அந்த சங்கத்தின் கூட்டமைப்பின் இணைப்பாளர் ரன்ஜன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள, மின்சார சபை அலுவலகங்களிலும் இவ்வாறு கறுப்பு கொடி போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## கூட்டு எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது!

### ஐ.தே.க. எம்.பி. நளின் பரிகாசம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கப் போவதாக கூறிய கூட்டு எதிர்க்கட்சியினருக்கு, 113 நாடாளுமன்ற உறுப்பினர்களை அல்ல 13 பேரின் ஆதரவைக் கூட காண்பிக்க முடியவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

24 மணி நேரத்தில் அரசாங்கம் ஒன்றை அமைக்கப் போவதாக தினேஷ் குணவர்த்தன கூறினார்.

எனினும் அது தற்போது கேலியாக மாறியுள்ளது என நேற்று இடம் பெற்ற நாடாளுமன்ற அமர்வில் தெரிவித்தார். (இ-10)

# “புலி” என்பது தமிழனுடைய அரசியல் அடையாளம்

## திருமுருகன் காந்தி சவால்



(சென்னை)

“புலி” என்பது தமிழனுடைய அரசியல் அடையாளம் என மே ‘17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற “வெல்லும் தமிழீழம் - தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாட்டில்” கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் தேசிய வழக்கில் புலி இருக்கின்றது. ஆனால் அந்த புலி எம்மிடம் இருக்கின்றது.

இந்தியா சிங்கத்தின் பக்கம் இருக்கின்றது. காடுகளில் கூட புலிக்கும் சிங்கத்துக்கும் சண்டை வந்தால் இறுதியில் வெல்வது புலியே.

யுத்தம் முடிந்து 9 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆகவே இந்த மாநாட்டின் மூலம், இந்த புத்தகத்தின் மூலம் உலகுக்கு இந்த விடயத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

அவ்வாறு செய்துவிட்டு தான் அந்தத் தலைவனின் புகைப்படத்தை மே 17 இயக்கத்தில் நாம் பயன்படுத்துவோம்.

இலங்கையில் மாபெரும் இனப்படுகொலையை செய்துவிட்டு “இலங்கை எமது நட்பு நாடு” என கூறுவதில் இந்தியாவுக்கு வெட்கம் இல்லையா? இதை இந்தியாவின் முகத்துக்கு முன்பாகவே கேட்க வேண்டும்.

கடந்தமுறை நினைவேந்தல் செய்வதற்கு 4 பேரை கைது செய்தீர்கள். ஆனால் இம்முறை 4000 பேர் நினைவேந்தலை செய்வோம். என்ன செய்வீர்கள், எனவும் சவால் விடுத்துள்ளார். (இ-10)

# வீட்டு வாடகையால் வாக்குவாதம் கத்திக்குத்தில் உரிமையாளர் பலி!

(திருமலை)

திருகோணமலை, நிலாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம்பல்தீவுப் பகுதியில், வீட்டு உரிமையாளருக்கும் வீட்டில் வாடகைக்கு இருந்தவருக்குமிடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தில், வீட்டு உரிமையாளர் கத்திக்குத்துக்கு இலக்காகி, நேற்றுக்காலை உயிரிழந்தாரென, பொலிஸார் தெரிவித்தனர்.


இவ்வாறு உயிரிழந்தவர், சாம்பல்தீவு, 06ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணகசிங்கம் கேதீஸ்வரன் (வயது-41 ) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாம்பல்தீவு பாடசாலைக்கருகில் இருக்கின்ற வீட்டை வாடகைக்குக் கொடுத்து விட்டு, வாடகைப் பணத்தை வாங்குவதற்காகச் சென்ற போது, வீட்டில் வாடகைக்கு இருந்தவருடன் தர்க்கம் ஏற்பட்டதையடுத்து, வீட்டு உரிமையாளர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

அதனையடுத்து, திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-10)

# கதிரையில் அமர்ந்திருக்க மூவருக்கும் வெட்கமில்லையா?-வீரவன்ச கேள்வி



(கொழும்பு)

மக்கள் ஆணையின் பிரகாரம், தேசிய அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியிலிருக்க எவ்விதமான அதிகாரம் இல்லையென, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீரவன்ச தெரிவித்தார். ஆகையால், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவிக் கதிரையில் அமர்ந்திருப்பதற்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை.

அவ்வாறு அமர்ந்திருக்கும் அவர்களுக்கு வெட்கமில்லையா எனக் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-10)

# தனிமையில் வாழ்ந்த மூதாட்டி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் உள்ள வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த மூதாட்டி ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த த.இரத்தினதேவி (வயது -74) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மூதாட்டி வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார். கடந்த மூன்று நாட்களாகக் மூதாட்டியை வெளியில் காணாத அயலவர்கள், நேற்று அவருடைய வீட்டுக்குள் தேடி சென்றுள்ளனர். அப்போது மூதாட்டி சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து பொலிஸார் அவ்விடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மூதாட்டியினுடைய வீட்டின் ஓடுகள் கழற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதால் இது திருடர்களால் மேற்கொள்ளப்பட்ட கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதால், சடலத்தை உடனடியாக மீட்கும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். (இ-9)

# நற்சிந்தனை பாடல்கள் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனை பாடல்கள் பாராயணம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நல்லூர் தேரடி 63 நாயன்மார் குருபூசை மடத்தில் தி.பொன்னம்பலவாணர் தலைமையில் இடம்பெறும். (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1334

Search for people, places and things | Nagendram Home

### கரன்




### துவா




### கமல்




### சோபி




### குமார்




### கவிலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உடல்தானம் செய்வோருக்கு இலவச மருத்துவ சேவை

(கொழும்பு)

உடல் தானம் செய்கின்றவர்களுக்கு இலவச மருத்துவ சேவை வழங்க முன்வருமாறு சுகாதார அமைச்சர் ராஜித தனியார் வைத்திய சாலைகளிடம்வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஜெயவர்த்தனபுரவிலுள்ள வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எதிர்காலத்தில் சிறப்புக் கட்டளையின் மூலம் கட்டாயமாக்குவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் இதன் போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



தாம் சுகாதார அமைச்சுப் பொறுப்பை ஏற்கின்றபோது உடல்உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை முறை வீழ்ச்சியடைந்திருந்ததாக தெரிவித்த அவர், தாம் அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாக மேலும் தெரிவித்தார். (இ-10)

# நீர்மின் உற்பத்திக்கு சவாலாகும் கடும் வரட்சியான காலநிலை

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் கடும் வரட்சியான காலநிலையின் காரணமாக நீர்மின் உற்பத்தி சவால்களை எதிர்கொள்ளக்கூடும் என்று மின்சக்தி மற்றும் நிலைபேறா எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மழையற்ற கால நிலையினால் முக்கிய மின் உற்பத்தி நீர்த்தேக்க பகுதிகள் மற்றும் சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கும் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் முக்கிய மற்றும் சிறிய நீர்மின் உற்பத்தியின் மூலம் தேசிய மின்சார வலைப்பின்னலுக்கு 1,725 மெகாஹேட்ஸ் (meha hertz) மின்சாரம் ஒன்றிணைக்கப்படுகின்றது.

மவுசகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 63.1 சதவீதமாகவும், காசல்றீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 58.7 வீதமாகவும், கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 35.4 சதவீதமாகவும், விக்டோரியா நீர்மட்டம் 21.3 சதவீதமாகவும், ரந்தனிகல நீர்த்தேக்கம் 48.9 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தும் அவசியத்தை அமைச்சின் அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளர் சுலக்ஸன ஜயவர்த்ன சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சிறுபான்மையினரின் ஆதரவில்லாமல் எவரும் ஆட்சிக்கு வரமுடியாது-கஜதீர

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் கடந்த மூன்று ஆண்டுகளாக நிறைவேற்றப்படவில்லை என முன்னாள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சோசலிச மக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கு எதிர்பார்த்த தீர்வுகளை வழங்க அரசாங்கம் தவறியுள்ளது.

சிறுபான்மை இன மக்களை வென்றெடுக்க முடியாது போனால், எவருக்கும் நாட்டில் ஆட்சியமைக்க முடியாது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



ஆட்சியமைக்க சிறுபான்மை மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. இதுவும் நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் வழங்கிய சமிக்ஞைகளில் ஒன்று.

தெற்கில் மக்களின் ஆதரவை பெற்றாலும். வடக்கில் மக்களின் ஆதரவும் அவசியம். வடக்கிலும் குழப்பமான சமிக்ஞையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்டவர்களுக்கு மக்கள் வழங்கியுள்ளனர்.

வடக்கில் இனவாத சக்திகள் இருக்கலாம், ஆனால் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் அவர்கள் இனவாதிகள் அல்ல என்ற சமிக்ஞையையும் வெளிக்காட்டியுள்ளனர். (இ-10)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் 364 உறுப்பினர்கள் மேலதிகமாக தெரிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்களிப்பு விகிதத்துக்கு அமைய அவர்கள் பெற்றுகொள்ள வேண்டிய உறுப்பினர்களுக்கு மேலதிகமாக அதிக தொகுதிகளை வெற்றி பெற்றதால் இம்முறை 364 உறுப்பினர்கள் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் மேலதிக உறுப்பினர் ஒருவர் கூட தெரிவு செய்யப்படாத மாவட்டமாக கிளிநொச்சி இனங்காணப்பட்டுள்ளது.

இதன்படி இம்முறை மொத்தமாக உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 869 ஆக அதிகரித்துள்ளதாக பவ்ரல் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

# கந்தையா நீலகண்டனின் மறைவு இந்து சமூகத்திற்குப் பேரிழப்பு!

## உமாமகேஸ்வரன் இரங்கல்

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களது மறைவு இலங்கைவாழ் இந்து சமூகத்திற்கு நிவர்த்தி செய்து கொள்ள முடியாததொரு பேரிழப்பைத் தந்துள்ளது.

இவர் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவராக, திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவராக, இந்து வித்தியா அபிவிருத்திச் சங்கத் தலைவராக, இலங்கை சட்டத்தரணிகள் சங்க உபதலைவராக, கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவராக, உறுப்பினராக, இலங்கை மனித நேய அமைப்பின் செயலாளராக, இனப் பிரச்சினைக்கு இணக்கம் காணும் குழு உறுப்பினராக இருந்து சிறப்புமிக்கதோர் பணியாற்றிய தோடல்லாமல் சிறுவர் இல்லங்களுக்கான மனிதநேய உதவிகள், வறிய பல்கலைக் கழக மாணவர்களின் முன்னேற்றத்திற்கான உதவிகள், வடக்குக்கிழக்கு போர்க் காலச் சூழலிற் பாதிக்கப்பட்ட வேளையில் நல்கிய வாழ்வாதார உதவிகள் எனச் சிறந்ததோர் சமூகத் தொண்டனாக வலம்வந்ததோடல்லாமல் இந்து மதத்திற்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக மட்டுமன்றி நாட்டில் நடைபெறும் பல்வேறு முரண்பாடுகளுக்கு எதிராகவும் துணிவோடு கண்டனம் வெளியிடுவதோடு மட்டும் நின்றுவிடாது ஆக்கபூர்வமானதொரு முடிவு கிடைக்கும்வரை தன்னை அர்ப்பணித்துப் போராடும் மனவுறுதி கொண்டவராகவும் விளங்கினார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வளர்ச்சிப் பாதையிற் பக்கபலமாக நின்று செயற்பட்டதோடு, திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் நிறுவன ரீதியான அனுசரணைகள் பலவற்றை வழங்கியமையையும் இக் கணத்தில் நினைவு கூர்கின்றேன்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர்அ.உமாமகேஸ்வரன் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# அகில இலங்கை சைவ மகாசபை இரங்கல்

(யாழ்ப்பாணம்)

சைவத்தின் மேன்மைக்காக சிறந்த தலைமைத்துவத்தை பன்னெடுங்காலம் வழங்கிய அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டனின் மறைவால் முழு சைவ உலகமும் கண்ணீருடன் அஞ்சலிக்கின்ற இத்தருணத்தில் அகில இலங்கை சைவ மகா சபையும் ஆற்றொணாத் துயரில் பங்கெடுக்கின்றது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், திருக்கேதீஸ்வரர் ஆலய திருப்பணிச் சபையின் தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமாகிய கந்தையா நீலகண்டன் தனது 72 ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் மறைவானது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள அன்னாரின் இழப்பை தாங்க வல்ல சக்தியை இறைசிவனிடம்வேண்டுவதோடு நடராசப் பெருமானிடம் தீராத அன்பு கொண்டிருந்த அன்னாரின் ஆத்மா



அந்த திருவடி நிழலில் பேரின்பப் பெருவாழ்வு பெற பிரார்த்திக்கின்றோம் என அந்த அமைப்பினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# சுவாமிநாதன் இரங்கல் செய்தி

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் , சட்ட வல்லுநர், பெருமதிப்புக்குரிய கந்தையா நீலகண்டன் அவர்கள் இறையடி எய்திய செய்தி மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கும் பேரதிர்ச்சி.

செயற்கரிய செய்தோர் பெரியோர் என்னும் வாக்கிற்கமைய அமரர் கந்தையா நீலகண்டன் சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் உழைத்த பெருந்தகையாளன் என்பதை நேரிலும் அவரின் செயற்பாடுகளின் வழியேயும் அறிந்தவன் என்ற வகையில் அவரின் பிரிவை எம்மினத்தின் பேரிழப்பாக எடுத்துக் கொள்கிறேன்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக இருந்து இவர் முன்னெடுத்த பணிகள் மகத்தானவை. தமிழினத்துக்கும் இந்து மதத்திற்கும் சேவை புரிவோர் மத்தியில் இவரது இடைவெளியை நிரப்புவது கடினமானது என எண்ணுகிறேன்.

சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்த அன்னாரது பிரிவாற் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ)



யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்தியர் எஸ்.பரமேஸ்வரன் மற்றும் நீரிழிவு கழகத் தலைவர் தீ.மைக்கல் ஆகியோர் உரையாற்றுவதையும் செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# விபத்தில் பெண் பலி; பத்து பேர் படுகாயம்

(கொழும்பு)

அநுராதபுரம் - பதவிய பாடசாலையொன்றிற்கு அருகில் வான் மின்சாரக் கம்பத்தில் மோதி ஏற்பட்ட விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில் மேலும் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்று மீண்டும் திரும்பிக்கொண்டிருந்த வெலிஓய பிரதேசத்தைச் சேர்ந்த சிலரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பதவிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் கவலைக்கிடமான நிலையிலுள்ள 6 பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-10)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2018-14.03.2018



உத்தியோகம்

அலுவலகப் பணியில் உள்ளவர்கள் வேலைப்பளுவால் அவதிப்பட நேரிடும். மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள். சக பணியாளர்களிடம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு பங்குதாரர்களால் பிரச்சினைகள் ஏற்படும். பங்குச்சந்தையில் ஓரளவு இலாபம் உண்டாகும்.

உடல்நலம்

ஏழரைச் சனியின் ஆதிக்கத்தால் உடல் உபாதைகள் வந்து கொண்டேயிருக்கும். சுவாச உறுப்புகள், முதுகு தண்டுவடத்தில் பாதிப்புகள் வருவதை அலட்சியம் செய்ய வேண்டாம். சுய மருத்துவம் செய்யாமல் நல்ல மருத்துவரை நாடுவது நல்லது.

குடும்பம்

குடும்பத்தில் பிரச்சினை அதிகரித்தாலும், அதை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். வாழ்க்கைத் துணையாலும், வாரிசுகளாலும் பிரச்சினைகள் உருவாகும்.

பணவரவு

தன ஸ்தானாதிபதி இராசியில் இருப்பதால் தனவரவிற்கு பற்றாக்குறை ஏற்படாது. என்றாலும் வீண் விரயங்கள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சிக்காக ஒருசிலர் கடன் வாங்கும் நிலை உருவாகலாம். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் யோசித்து செயற்படுவது நல்லது.

விருச்சிக குரு

பெப்ரவரி 14ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குரு செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைகிறார். விரய ஸ்தானத்தில் இந்த சேர்க்கை ஏற்படுவதால் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும். மார்ச் 7ஆம் திகதி குரு வக்ரம் பெறும்பொழுது இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றங்கள் உருவாகலாம்.

மீன புதன்

உங்கள் இராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுகிறார். எனவே தொழிலில் மந்தநிலை ஏற்படும். வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாக நேரிடும். வாகனப் பழுதுகளால் கவலை கொள்வீர்கள்.

## கலக்கம் அகலும்!

மீன சுக்ரன்

மார்ச் 3ஆம் திகதி உங்கள் ராசிக்கு 6,11-க்கு அதிபதியான சுக்ரன் உச்சம் பெறுகிறார். எனவே உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு உயர் பதவிகள் கிடைக்கலாம். இளைய சகோதரத்துடன் இணக்கம் ஏற் படும்.

தனுசு செவ்வாய்

மார்ச் 10ஆம் திகதி தனுசு இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். 5,12இற்கு அதிபதி உங்கள் இராசிக்கு வரும் பொழுது பூர்வீகச் சொத்துகளில் இருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். நீண்ட தூரப் பயணங்களால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியா




கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

விரய குருவின் ஆதிக்கத்தால் விரயங்கள் கூடும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். கணவன்- மனைவி இடையே பிரச்சினைகள் வரலாம்.

கலைத்துறை

புதிய ஒப்பந்தங்கள் வரத்தொடங்கும். முயற்சிக்கு முழுமையான பலன் கிடைக்கும். பிற இனத்தாரால் ஆதாயம் உண்டு. எழுத்துத்துறை, பேச்சுத்துறையில் உள்ளவர்களுக்கு எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்.

அரசியல்

எதிர்ப்புகள் மேலோங்கும். இருப்பினும் செல்வாக்கு குறையாது. வெளிநாட்டுப் பயண வாய்ப்புகள் கைகூடும். இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம்.

பொதுப்பலன்

உங்களுக்கு இந்த மாசி மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கத்தில் தொடங்கினாலும், இராசிநாதன் குரு இலாப ஸ்தானத்தில் இருப்பது யோகம் தரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி கூடுவதற்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். அதிகார பதவியில் உள்ளவர்களின் அனுகூலம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் சிலர், சுயதொழில் செய்ய முன்வருவர். கணக்கு வழக்குகளை கச்சிதமாக வைத்துக் கொள்ளுங்கள்.

சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால், மறைமுகப்பகை இருக்கத்தான் செய்யும். அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். ஆரோக்கியத் தொல்லைகளைக் கூட சமாளித்துவிடுவீர்கள். ஆனால் அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் தொல்லையை சமாளிக்க இயலாது. எதிலும் பொறுமை தேவை. ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பாராத வகையில் இடமாற்றங்கள் வரலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



உத்தியோகம்

திடீர் இடமாற்றங்கள் வந்து சேரலாம். இருக்கும் இடத்திலேயே நீடித்துக்கொள்ள முயற்சிப்பது அவ்வளவு நல்லதல்ல. வெளிநாடு செல்லும் முயற்சியில் தாமதம் ஏற்படும். தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. பங்கு வர்த்தகத்தில் பெரிய முதலீடு செய்ய வேண்டாம்.

உடல்நலம்

இராசிநாதன் சனி, விரய ஸ்தானத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். நேரம் தவறாமை மற்றும் சுத்தமான உணவுகளை சாப்பிடுவதன் மூலம் நோய்களில் இருந்து விடுபட இயலும்.

குடும்பம்

குடும்பத்தில் ஒருவரைஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. நீண்டகாலமாக எதிர்பார்த்த மண வாய்ப்பும், மகப்பேறு வாய்ப்பும் கிடைக்கும் அமைப்பு உண்டு. விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் வந்திணைவர்.

பணவரவு

தனாதிபதி சனி விரய ஸ்தானத்தில் இருப்பதால், வரவு திருப்திகரமாக இருந்தாலும் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். ஒருசில சமயங்களில் பற்றாக்குறை அதிகரித்து நகைகளை அடகு வைக்கும் சூழ்நிலையும் உருவாகலாம்.

விருச்சிக குரு

பெப்ரவரி 14ஆம் திகதி விருச்சிகத்திற்கு குரு செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து குரு-மங்கல யோகத்தை உருவாக்குகிறார். 3,12-க்கு அதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சகோதரர்களால் உதிரி வருமானங்கள் வரும். வெளியூர்ப் பயணங்களால் வெகுமதி கிடைக்கும். மார்ச் 7ஆம் திகதி குரு வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தொல்லை அகல ஒருதொகையைச் செலவிடுவீர்கள்.

மீன புதன்

உங்கள் இராசிக்கு 6,9இற்கு அதிபதியான புதன், பிப்ரவரி 27ஆம் திகதி மீனத்தில் நீச்சம் பெறப்போகிறார். எனவே கொடுத்த கடன்கள் வசூலாகும். எதிரிகள் விலகுவர். புதிய உத்தியோக வாய்ப்புகள் கைகூடி வரும்.

## கவனம் தேவை!

மீன சுக்ரன்

மார்ச் 3ஆம் திகதி உங்கள் இராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் மீனத்தில் உச்சம் பெறப் போகிறார். தொழில் வளர்ச்சி மேலோங் கும். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். முன்னோர் திருப்பணிகளை முறையாக நடத்தும் வாய்ப்பு உண்டு.

தனுசு செவ்வாய்

மார்ச் 10ஆம் திகதி தனுசு இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். 4,11இற்கு அதிபதி




விரய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது சொத்து விற்பனையால் இலாபம் உண்டு. வீடு, மனை வாங்கும் வாய்ப்பும் ஏற்படும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்பச்சுமை கூடும். கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. வாரிசுகளால் கவலை ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்களும், இடமாற்றங்களும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உடல்நலத்தில் மட்டும் அதிக கவனம் தேவை.

கலைத்துறை

புதிய முயற்சிகள் கைகூடும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உழைப்பால் உயரும் நேரம் இது.

அரசியல்

அரசியல் களத்தில் போராட்டங்களை சந்திக்க நேரிடும். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கலாம். இருப்பினும் மேலிடத்து உத்தரவைப் பெற்று, நீங்கள் செய்யும் செயல்பாடுகளால் உயர் பதவிகள் தேடி வரலாம். போட்டிகளுக்கு மத்தியில் போராடி வெற்றி காணும் நேரம் இது.

பொதுப்பலன்

உங்களுக்கு இந்த மாசி மாதம் விரயச் சனியின் ஆதிக்கமும், ஜென்ம கேதுவின் ஆதிக்கமும் இருப்பதால், வழிபாட்டின் மூலம் தான் வளர்ச்சி காண முடியும். எதையும் திருப்தியாகச் செய்ய இயலாது. அலுவலகப் பணி முதல் அனைத்துப் பணிகளையும் போராடி முடிக்கும் சூழ்நிலை உருவாகும். புதுத்திட்டங்களை நீங்கள் தீட்டினாலும் அது நடைபெறுமா? என்பது சந்தேகம் தான். பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். குடும்பத்துடன் தல யாத்திரை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

மாதத்தின் பிற்பகுதியில் மகிழ்ச்சிக்குரிய செய்திகள் ஒன்றிரண்டு நடைபெறலாம். தடைபட்ட சுபகாரியங்கள் தானாக நடைபெறும். வீடுகட்டும் முயற்சி அல்லது பராமரிக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். விரயங்களைச் சமாளிக்க கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பெற்றோர்களின் உடல்நலத்தில் கவனம் தேவை. வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய மாதமிது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பட்டுப்புழுவும் எறும்புக் கூட்டமும்

ஒரு சிறிய தோட்டத்தில் ஒரு எறும்புப் புற்று இருந்தது. அந்த எறும்புப் புற்றிலிருந்த எறும்புகள் பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின் மீது ஏறிக் கொண்டு இருந்தன. அந்த மரத்திற்குப் பக்கத்தில் சிறிய செடியொன்று இருந்தது.


அந்தச் செடியின் ஓரிடத்தில் ஒரு சிறிய கூடு இருந்தது. அந்த பஞ்சுக் கூட்டிற்குள் ஒரு புழுவொன்று மெல்ல வாலாட்டிக் கொண்டு இருந்தது. அதைக் காணவே அசிங்கமாக கறுப்பாக இருந்தது.

அது ஒரு பட்டுப் புழு. அது தான் நன்கு வளர்ந்து கூட்டுப் புழு ஆகி பின் அழகிய பட்டுப் பூச்சி ஆகும். இப்போது எறும்புகள் அந்தப் புழு தனது கூட்டில் இருந்த போதுதான் பார்த்தன.

அந்த எறும்புக் கூட்டத்தில் ஒரு பொல்லாத தீய குணமும் குறும்பும் கொண்ட ஒரு எறும்பு இருந்தது.

அந்த எறும்பு மரத்தடியில் இருந்து செடியில் வாழும் புழுவைக் கண்டன.

உடனே "ஓ! சிறிய புழுவே! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் பாவமாக உள்ளது. எங்களைப் பார். எத்தனை உயரமான மரத்தில் எத்தனை எளிதாக ஏறிச் செல்கிறோம். ஆனால், நீயோ ஒருபோதும் உயரமான மரத்தில் ஏற முடியாது பாவம். உங்களது பிறவி அப்படி! என்ன செய்வது. "என்று கேட்டான். அதனைக் கேட்ட மற்ற எறும்புகள் மிக கேலியாகச் சிரித்தன.



புழு அமைதியாக பதில் ஏதும் கூறாமல் இருந்தது. பின் எறும்புகள் அந்தப் புழுவை கேலியும், கிண்டலும் செய்தபடி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டன. சிறிது நாட்கள் ஆனது.

ஒரு நாள் அதே எறும்புகள் மீண்டும் அந்த மரத்தில் மேலே ஏறிச் சென்றன. அப்போது முசுக்கொட்டை செடியின் அருகில் பட்டுப் புழுவின் கூடு மட்டும் இருந்தது.

சுற்றிலும் அந்தப் பட்டுப் புழுவைக் காணவே இல்ல. உடனே அந்த எறும்புகள், பாவம் அந்தப் புழு கூட்டிலேயே தனது வாழ்வை முடித்துக் கொண்டது போலும் என்று கூறிக் கேலியாக சிரித்தன.



அப்போது எறும்புகளின் தலைக்கு மேலிருந்து, "எறும்பு நண்பர்களே!" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது.

எறும்புகள் மேலே பார்த்தன. வானத்தில் மிக அழகிய பட்டுப் பூச்சி ஒன்று சிறகடித்தபடி நின்றது.

அந்தப் பட்டுப் பூச்சி எறும்புகளைப் பார்த்து, "நண்பர்களே! இப்போது நான் உங்களை விட மிக உயரமான வானில் சிறகடித்துப் பறக்கிறேன்.

உங்களால் வெறும் மரத்திலும் உயரமான சுவர்களிலும் மட்டும் தான் ஏற முடியும்.

ஆனால், என்னால் அதை விட மிக உயரமான மலைக்கு மேலும் வானம் வரையிலும் கூட பறக்க முடியும்" என்று கூறியது.

"மேலும் இதற்காக உங்கள் பிறவியை ஈனப் பிறவி என்று நான் கூறவில்லை. யார் யாருக்கு என்ன திறமை தேவையோ அந்தத் திறமைகளை அவரவர்க்கு இறைவன் தருகிறான். இதனால் நமது திறமைகளுக்காக நாம் கர்வப்பட்டு பிறரை இகழக் கூடாது.

அதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்று அறிவுரை கூறியது. பாவம் எறும்புகள் இப்போது தலை குனிந்து சென்றன.

நீதி : எப்போதும் பிறரை குறைத்து மதிப்பிடக்கூடாது!

## 02.2018 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ 1547 - ஆறாம் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- ❖ 1627 - யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.
- ❖ 1798 - பாப்பரசர் ஆறாம் பயஸ் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- ❖ 1835 - சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.
- ❖ 1910 - எகிப்தியப் பிரதமர் பூட்ரோஸ் காலி (Boutros Ghali) கொல்லப்பட்டார்.
- ❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா எனிவெட்டாக் தீவைக் கைப்பற்றியது.
- ❖ 1962 - மேர்க்குரி திட்டம்: ஜோன் கிளென் பூமியை மூன்று முறை சுற்றி பூமியைச் சுற்றிய முதலாவது அமெரிக்கர் என்ற புகழைப் பெற்றார்.
- ❖ 1965 - அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படங்கள் எடுத்த ரேஞ்சர் 8 விண்கலம் சந்திரனுடன் மோதியது.
- ❖ 1987 - அருணாசலப் பிரதேசம் அசாமில் இருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.
- ❖ 2002 - எகிப்தில் தொடருந்து ஒன்று தீப்பிடித்ததில் 370 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- ❖ 1844 - லுட்விக் போல்ட்ஸ்மான், ஆஸ்திரிய இயற்பியலாளர், மெய்யியலாளர் (இ. 1906)
- ❖ 1876 - கா. நமச்சிவாயம், தமிழறிஞர் (இ. 1936)
- ❖ 1941 - லிம் கிட் சியாங், மலேசிய அரசியல்வாதி
- ❖ 1945 - ஜோர்ஜ் ஸ்மூட், அமெரிக்க விண்ணியல் அறிஞர்
- ❖ 1951 - கார்டன் பிரவுன், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர்
- ❖ 1967 - கர்ட் கோபேன், அமெரிக்கப் பாடகர் (இ. 1994)
- ❖ 1987 - மைல்ஸ் டெல்லர், அமெரிக்க நடிகர்
- ❖ 1988 - ஜியா கான், அமெரிக்க-இந்திய நடிகை, பாடகி (இ. 2013)

### இறப்புகள்

- ❖ 1762 - டோபியாஸ் மேயர், செருமானிய வானியலாளர் (பி. 1723)
- ❖ 1862 - பிரான்சிஸ்கோ பலக்டாஸ், பிலிப்பீனிய எழுத்தாளர் (பி. 1788)
- ❖ 1896 - ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர், புலவர் (பி. 1820)
- ❖ 1907 - ஆன்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரான்சிய வேதியியலாளர் (பி. 1852)
- ❖ 1972 - மரியா கோப்பெர்ட் மேயர், நோபல் பரிசு பெற்ற செருமானிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1906)
- ❖ 1960 - வை. மு. கோதைநாயகி, தமிழகப் புதின எழுத்தாளர் (பி. 1901)
- ❖ 1987 - ஜோசப் பாரேக்காட்டில், கத்தோலிக்கத் திருச்சபை கர்தினால் (பி. 1912)
- ❖ 2001 - யோகி ராம்சுரத்குமார், இந்திய ஆன்மிகத் துறவி (பி. 1918)
- ❖ 2008 - டி.ஜி. எஸ். தினகரன், கிறித்தவ மறைபரப்புனர் (பி. 1935)
- ❖ 2010 - ஸ்ரீதர் பிச்சையப்பா, இலங்கை வானொலி, மேடை நாடகக் கலைஞர் (பி. 1962)
- ❖ 2011 - மலேசியா வாசுதேவன், பாடகர், நடிகர்
- ❖ 2012 - ரா. கணபதி, தமிழக ஆன்மீக எழுத்தாளர், தமிழறிஞர்
- ❖ 2012 - எஸ். என். லட்சுமி, தமிழ்த் திரைப்பட நாடக நடிகை (பி. 1934)
- ❖ 2014 - பார்வதி கிருஷ்ணன், இந்திய அரசியல்வாதி (பி. 1919)
- ❖ 2015 - கோவிந்த் பன்சாரே, இந்திய எழுத்தாளர் (பி. 1933)

### சிறப்பு நாள்

- ❖ சமூக நீதிக்கான உலக நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 70 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 50 | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 60 | 70 | 80 |
| தக்காளி | 40 | 50 | 25 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 25 | 50 | 30 |
| கோவா | 60 | 45 | 40 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 30 | 55 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 75 | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 70 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 85 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 100 | - | 60 | 50 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 200 | 140 | 150 | 180 |
| பீற்றூட் | 50 | 40 | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 200 | 350 | 600 | 600 |
| போஞ்சி | 80 | 100 | 80 | 120 | 100 |
| கத்தரி தம்புள்ள | 50 | 30 | 35 | - | 60 |
| கீரை-1பிடி | 30 | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 20 | 30 | 60 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 30-80 | 75 | 80 |
| இராசவள்ளி | 180 | 200 | 140 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 20 | 80 | 50 | 120 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 50 | - | - | 80 |

அமெரிக்காவில் வாழ்ந்த செவ்விந்தியருக்கு நேர்ந்த கதி இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படக் கூடாது.
– கோபிகிருஷ்ணா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழினத்தின் எதிர்கால இருப்பு எப்படியாகும் என்ற ஏக்கம்...

நாட்டின் இனப்பெருக்கம் பற்றிய தகவலை இனப்பரம்பலின் அடிப்படையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்கள் அண்மையில் வெளியிட்டிருந்தார்.

அவர் வெளியிட்ட தகவலின் பிரகாரம் முஸ்லிம் மக்களின் இனப்பெருக்கம் 12 வீதமாகவும் சிங்கள மக்களின் இனப்பெருக்கம் 5.7 வீதமாகவும் தமிழர்களின் இனப்பெருக்கம் 1.5 வீதமாகவும் உள்ளதென அவர் தனது தகவலைப் பதிவு செய்துள்ளார்.

இத்தகவல் ஏலவே உணரப்பட்டதாயினும் புள்ளிவிபர ரீதியில் அவர் பட்டியல்படுத்திய போது, எங்கள் தமிழினத்தின் எதிர்காலம் குறித்த பயம் நம்மைத் தொற்றிக் கொள்ளவே செய்கிறது.

இன்னும் பத்து ஆண்டுகளில் இந்த நாட்டின் இரண்டாவது சனத்தொகை முஸ்லிம் மக்களாக இருப்பர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதனை நாம் கூறுவது முஸ்லிம் மக்களுக்கு எதிரானதன்று.

மாறாக முஸ்லிம் மக்களின் இன, மதப் பற்றின் வெளிப்பாட்டை நாம் சற்றேனும் உணர வேண்டும் என்பதேயன்றி வேறில்லை.

கடந்த 30 ஆண்டுகளாக இலங்கைத் தீவில் நடந்த யுத்தமும் புலம்பெயர்வும் எங்கள் தமிழ்ச் சனத்தொகையைக் கணிசமாகக் குறைத்துக் கொண்டது.

இதுதவிர, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு என்பன காரணமாக திருமண வயதெல்லை அதிகரித்துச் செல்ல, மகப்பேற்றுக்கான வாய்ப்புக்களும் குறையத் தொடங்கின.

இவற்றுக்கு மேலாக, ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் போதும். இப்போதிருக்கக் கூடிய பொருளாதாரச் சுமையில் அதிக பிள்ளைகளைப் பெற்றெடுப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்ற நினைப்பும் எங்கள் இனத்தின் பெருக்கத்தை கணிசமாக வீழ்ச்சியடையச் செய்துள்ளது.

இந்நிலைமையானது இந்த நாட்டின் மிகக் குறைந்த சனத்தொகை தமிழ் மக்களே என்ற ஒரு மோசமான சூழலை ஏற்படுத்தப் போகிறது.

அதேவேளை மத்திய அரசு விடுக்கும் குடும்பக் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டை அமுல்படுத்துவதில் எங்கள் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் அதிதீவிரம் காட்டுவதையும் இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

தென்பகுதியில் இருந்து வருகின்ற அறிவுறுத்தல்களை, சுற்றுநிருபங்களைச் செய்து முடித்து அறிக்கை சமர்ப்பித்து விட்டால் அது போதும் என்றிராமல்;

அங்கிருந்து வருகின்ற அறிவுறுத்தல்களின் உள்நோக்கம் என்ன? அதனால் எங்கள் இனத்துக்கு ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் யாவை? என்பனபற்றியெல்லாம் ஆராய்ந்து செயற்படுவது தொடர்பில் எங்கள் தமிழ் அதிகாரிகள் கருசனை கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை கடுமையாக அமுலாக்கம் செய்து எங்கள் இனத்தைக் குறைப்புச் செய்வது தொடர்பில் எங்கள் மருத்துவ அதிகாரிகளும் துணை மருத்துவ சேவையாளர்களும் சிந்திக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

எல்லாவற்றுக்கும் மேலாக எம் இனத்தின் அதிகரிப்புக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதும் மிகமிக அவசியமானதாகும்.

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய பெருவிழாவில் முதன்முறையாக சிங்கள மொழியில் திருப்பலி

வரலாற்று சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழாவில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 23,24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த பெருநாளில் இம்முறை வழமையை விட அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பெரும்பான்மையின மக்களும் அதிகளவில் கலந்து கொள்ளவுள்ளார்கள் என தெரிய வருகிறது.

இந்த நிலையில் முதன்முறையாக சிங்கள மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. இரு மொழிகளிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றமை இதுவே முதல் தடவையாகும்.

இம்முறை காலி மறை மாவட்ட ஆயர் ரேமன்ட் விக்கிரமசிங்க கலந்து கொண்டு சிங்கள மொழியில் திருப்பலி ஒப்புக் கொடுக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-9)

## மோ.சைக்கிள் - கார் விபத்து இளைஞன் படுகாயம்

காரும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர்மோதிவிபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் நெல்லியடி நாவலர்மடம் பகுதியில் பிரதான வீதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கரணவாயைச் சேர்ந்த இளைஞர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

### அரசு வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

## வட மாகாண பட்டதாரிகள் மீண்டும் போராடத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலைகளுக்குள் உள்வாங்குவதாக அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியமையினால் மீண்டும் போராட்டத்தினை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக வட மாகாண பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். தமது வேலைவாய்ப்பு தொடர்பாக வட மாகாண பட்டதாரிகள் நேற்று வட மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடி கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தனர்.

அந்தக் கலந்துரையாடலின்போது கடந்த வருடம் முன்னெடுத்த தொடர் போராட்டத்தினைப் போன்று மீண்டும் போராட்டமொன்றினை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் கூறுகையில், கடந்த வருடம் 143 நாட்களாக எமது போராட்டத்தினை முன்னெடுத்திருந்த நிலையில், வட மாகாண ஆளுநர் ஊடாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதி தந்திருந்தது.

ஆனால் அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில், இதுவரையில் எமக்கான சரியான தீர்வுகள் எட்டப்படாத நிலையில், மீண்டும் ஒரு போராட்டத்தினை முன்னெடுக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இன்னும ஓரிரு வாரங்களில் எமக்கான தீர்வினை அரசாங்கம் தர வேண்டும். எமது போராட்டத்தினை மீண்டும் முன்னெடுக்க உள்ளோம். ஏனெனில் பட்டதாரிகளுக்கான சரியான நியமனங்களை தராத காரணத்தினால், சமூக பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

எனவே நல்லாட்சி அரசாங்கம் எமக்கான தீர்வினை விரைந்து வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கத் தவறும் பட்சத்தில் மீண்டும் எமது போராட்டம் மேற்கொள்ளப்படும். அத்துடன் தமது கோரிக்கையினை முன்வைத்து மகஜர் ஒன்றினை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைப்பதற்கான தீர்மானத்தினையும் மேற்கொண்டுள்ளனர். (ம-4)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### இறந்த வீட்டிற்குப் போய் வந்தால் குளிக்க வேண்டுமா?

பழைய ஆசார முறைப்படி இறந்த வீட்டிற்குப் போய்விட்டு வந்தாலோ அல்லது சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டாலோ குளிக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். குளிப்பது என்றால் இன்று செய்வதைப்போல் குளியலறைக்குள் சென்று கொஞ்சம் தண்ணீரை தலை வழியே ஊற்றி வருவதல்ல.

ஆறு, குளம், கிணறு ஏதாவது ஒன்றிற்குச் சென்று உடுத்தியுள்ள ஆடைகளையெல்லாம் தண்ணீரில் நனைத்துக் குளிக்க வேண்டும். அவ்வாறு குளிக்காமல் வீட்டிற்குள் செல்லக்கூடாது. இதற்குக் காரணம் உண்டு. முதலாவது சுத்தத்தைக் கடைப்பிடிப்பது என்பதாகும்.

இறந்த வீட்டில் ஏராளமான ஆட்கள் வந்து போயிருப்பார்கள். தீட்டு உள்ளவர்களும் அங்கு வந்திருப்பார்கள். பலர் மீது நமது உடல் பட்டிருக்கும்.

இறந்த உடலைத் தொட்டவர்களையும் தீட்டு உள்ளவர்களையும் தொட்டால் குளிக்கவேண்டும் என்பது பழைய ஆசாரமாகும்.

இறந்த வீட்டிற்கு வரும் ஆட்கள் கூட்டத்தில் அனைவரது உஷ்ணமும் வாயுவில் கலக்கும். அந்த வாயு அனைவர் மீதும் படும். அந்தக் கூட்டத்தில் நோயாளிகளும் இருப்பார்கள். எனவே நோய் அணுக்களும் காற்றில் கலந்திருக்கும். பிரேதத்தை எரிக்கும்போது உண்டாகும் புகையும் காற்றில் கலந்து அந்தக் காற்றும் நமது உடலில் படும். இத்தகைய காரணங்களால் உடல் அசுத்தமடைய வாய்ப்புண்டு.

அந்த அசுத்தங்களைக் கழுவி சரீரத்தையும் ஆடைகளையும் சுத்தம் செய்வது நமது ஆரோக்கியத்திற்கு அவசியமாகும். இத்தகைய சுகாதாரக் காரணங்களுக்காகத்தான் இறந்த வீட்டிற்கு போய்விட்டு வந்தால் குளிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதனகிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30மணி வரை வவுனியா பிரதேசத்தில அட்டம்பஸ்கட கிராமம், தவசிகுளம் கிராமம், பண்டாரிக் குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- குழந்தை தன் தேவைக்கு தாயை நம்பியிருக்கிறது. அதுபோல. வளர்ந்த பின்னும் மனிதன் தன் தேவைகள் அனைத்திற்கும் உலகநாயகியான ஜகன்மாதாவையே நம்பி வாழ்கிறான்.
- அனைத்து சக்தியும் கொண்ட அம்பாள் கருணை வடிவத்துடன், எங்கும் நிறைந்திருக்கிறாள். உலகின் இயக்கத்திற்கு ஆதாரமாகத் திகழ்கிறாள்.
- இந்தியாவில் பெண்களுக்கு தரப்படும் மதிப்பு உயர்வானது. தெய்வத்தை அன்னையாகக் கருதி வழிபாடு செய்தால், ஆன்மீக வாழ்வில் அனைத்து நன்மைகளும் உண்டாகும்.
- குழந்தைகள் தாயிடமே அதிக பாசத்தை காட்டுகின்றனர். இதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தாய்க்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.
- ஆன்மீக பலத்தால் மட்டுமே நாடு எழுச்சி அடையப் போகிறது. கடவுளிடம் கொண்ட நம்பிக்கையால் இந்திய மக்கள் பலம் பெற்றிருக்கிறார்கள்.
- மனிதன் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளனாக இருக்கிறான். அவனுக்கு தேவையான அனைத்து வலிமையும், உதவியும் அவனுக்குள்ளேயே இருக்கிறது.

# பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம் நண்பர்கள் வி.கழக அணி சம்பியன்



2018 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேசத்திற்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமையா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஜே/101 கிராம சேவகர் பிரிவு நண்பர்கள்விளையாட்டுகழக அணியை எதிர்த்து ஜே/121 கிராம சேவகர் பிரிவு கொக்குவில்மத்திய சனசமூக நிலைய விளையாட்டு கழக அணி மோதியது. இப்போட்டியில் ஜே/101 கிராம சேவகர் பிரிவு அணி 68:50 என்ற ரீதியில் வெற்றி பெற்று 2018 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது. (க-26)

# இந்திய உணவு வழங்காததால் நீக்கப்பட்ட தெ.ஆபிரிக்க சமையல்காரர்




இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு, இந்திய உணவு வழங்காத சமையல்காரரை தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகம் நீக்கியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்நிலையில், தென்னாபிரிக்க அணியுடனான 6வது கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது.

இந்த போட்டியின் போதும், பயிற்சியில் ஈடுபட்ட போதும் இரு நாட்டு வீரர்களுக்கும் உணவளிக்க சமையல்காரர் பணியமர்த்தப்பட்டிருந்தார்.

இவர், இந்திய வீரர்கள் கேட்ட இந்திய உணவுகளை வழங்க மறுத்துவிட்டார். இதனால் இந்திய வீரர்கள் அதிருப்தி அடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, அவரை தென்னாபிரிக்க நிர்வாகம் நீக்கிவிட்டு, இந்திய உணவு கிடைக்கும் உணவகத்தில் இருந்து, சமையல்காரர் ஒருவரை உணவு வழங்க பணியில் அமர்த்தியுள்ளது.

இதேபோல, ஜோகன்ஸ்பர்க்கில் நடக்கும் இருபது- 20 போட்டிக்காக, இந்திய உணவுகள் தயார் செய்யும் உணவகத்தில் இருந்து ஒருவர் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். (க)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் இ.சிவசங்கர் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பத்ம காந்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கபடி பயிற்றுநர் கு.முகுந்தன் மற்றும் மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி ச.திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# புதிய சாதனை படைத்தார் இந்தியாவின் புவனேஸ்வர் குமார்




இந்தியா - தென்னாபிரிக்கா விளையாடும் முதல் இருபது-20 போட்டியில் புவனேஸ்வர் குமார் 5 விக்கெட்டுகள் கைப்பற்ற இந்தியா 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா-தென்னாபிரிக்கா இடையே நடந்து முடிந்த முதல் இருபது-20 போட்டியில், இந்தியா 203 ஓட்டங்கள் குவித்தது.

தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்காவின் ஹென்ரிக்ஸ் (70), பெஹர் தின்(39) என ஓட்டங்கள் எடுத்து இந்தியாவின் வெற்றியை கேள்விக்குறியாக மாற்றிக் கொண்டிருந்தனர்.

அப்போது சிறப்பாக பந்து வீசிய புவனேஷ்வர் குமார் ஹென்ரிக்ஸ் விக்கெட்டை கைப்பற்றினார்.

அவர் முதல் 3 விக்கெட்டுகளை கைப்பற்றியதோடு, மற்றொரு முக்கிய விக்கெட்டான கிளாசன் (16), மோரிஸ்(0) விக்கெட்டுகளையும் வீழ்த்தி 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதுமட்டுமன்றி கிரிக்கெட்டின் அனைத்து ரக போட்டியிலும் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையையும் புவனேஷ்வர் குமார் படைத்துள்ளார்.

புவனேஸ்வர் குமார் டெஸ்ட் போட்டியில் 4 முறையும், ஒருநாள் மற்றும் இருபது- 20 போட்டியில் தலா ஒரு முறையும் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# வடமாகாண வெற்றிக் கிண்ணம் சென்.அன்ரனீஸ் அணி சம்பியன்

திக்கம் இளைஞர் சனசமூக நிலையம் வடமாகாண ரீதியில், கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை தமது விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தியது.

வடமாகாணத்தைச் சேர்ந்த 60 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் தொடங்கி அனைத்து நொக்கவுட் முறையில் நடைபெற்று இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 17 ஆம் திகதி இரவு நடைபெற்றது. இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றிருக்கவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் ஒரு கோலைப் பெற்றது.

அந்தக் கோல் இறுதி வரையில் நீடிக்க, சென். அன்ரனீஸ் அணி, 01:00 என்ற கோல்கணக்கில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் மன்னார் ஜோசப் வாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

இதில் ஜோசப்வாஸ் அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகியது.

இறுதிப்போட்டியின் நாயகனாக சென். அன்ரனீஸ் அணியின் கனிஸ்ரனும், தொடர்நாயகனாக அந்த அணியின் கோல் காப்பாளர் கர்ணரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். ஜோசப்வாஸ் அணிக்கு சிறந்த நன்னடத்தை அணிக்கான விருதும் வழங்கப்பட்டது.

வெற்றிபெற்ற அணிக்கு 1 இலட்சம் ரூபாய் பணமும், வெற்றிக் கேடயமும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு 50 ஆயிரம் ரூபாய் பணமும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டன. (க-26)

## எதிர்க் கட்சியினரே...

வெற்றியை மீண்டும் ஒருபோதும் தாரை வார்க்க விடமாட்டோம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எம்முடன் இணைந்து செயற்பட முடியு மான அத்தனை சக்திகளையும் இணைத் துக் கொண்டு, தவறுகளை சரிசெய்து எமது இந்த அரசாங்கத்தின் பயணத்தை நாம் தொடர்வோம் என சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு விமல் வீர வன்சவின் கருத்துக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

கிராமத்தின் தேர்தல் ஒன்றுக்காக நாட் டின் அரசாங்கத்தை மாற்றிய வரலாறு உல கில் எங்கும் இல்லை. நாம் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை சரிசெய்து கொண்டு எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு வெற்றி கரமாக முகங்கொடுப்போம்.

இதனால், எதிர்க் கட்சியினரே அவசரப் பட வேண்டாம். இன்னும் எமக்கு 2 வரு டங்கள் உள்ளன. இந்த வருடம் எமக்கு எதி ரான அனைத்து சக்திகளையும் மாற்றுவ தற்கான வருடமாகும். இதனை சாதிக்க முடி யும் என்ற நம்பிக்கையும் பலமும் எம்மிடம் உள்ளது. இந்த இரு தலைவர்களுடனும் எமது பயணத்தை நாம் தொடர்வோம் என வும் அமைச்சர் மேலும் கூறினார். (ம)

## ஆசிரியையின்...

திக்கம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன் றில் கல்வி கற்பித்துவரும் வதிரிப்பகுதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் பாடசாலை முடி த்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் அல் வாய் செல்லையர் வீதிப்பகுதியில் ஆசிரியை யின் துவிச்சக்கர வண்டியினை முந்திக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு வர் திடீர் என மோட்டார் சைக்கிளைத் திரு ப்பி ஆசிரியையின் துவிச்சக்கரவண்டியில் இருந்த கைப்பையைத் திருடிச் சென்றுள்ள னர்.

அதற்குள் ஆவணங்களும் தொலை பேசியும் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறை யிடப்பட்டதையடுத்து பொலிஸார் தீவிர விசா ரணையினை மேற்கொண்டுள்ளனர்.(ம-60)

## எதிர்க்கட்சித் தலை...

தெரிவித்துள்ளார்.

ரணில்-மைத்திரி தலைமையிலான நல் லாட்சி அரசாங்கம் இன்னும் ஒரிரு வெசாக் போயா தினங்களில் கவிழ்க்கப்படும் என்றும் அவர் ஆரூடம் வெளியிட்டார்.

நாங்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோருவோம். அப்பதவியில் வருபவரே எதிர்க கட்சித் தலைவராவார். ஐக்கிய தேசியக் கட்சி க்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடை யிலான கொடுக்கல் வாங்கல்தானே இது. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிரு ந்து ஒருவர் தெரிவாகினால் அவருக்கு நாங் கள் வெளியிலிருந்து ஆதரவளிப்போம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வரு பவருக்கு நாங்கள் ஆதரவளிக்கமாட்டோம். இதன்படி நாங்கள் எதிர்க்கட்சியாக இருப்போம்.

எமக்கு வழங்க வேண்டிய இடத்தை அவ ர்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின் றோம். அரசாங்கம் இருக்கும், இல்லாமலும் போகும். ஆனால் இந்த அரசாங்கம் இன் னும் இரண்டு வெசாக் போயா தினங்களு க்கே நிற்கும். அதன்பிறகு இருக்காது. பிரத மரை நீக்குவது குறித்து சட்டமா அதிபரது ஆலோசனை தேவைதானா? ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ப தை யாரும் மறந்துவிட வேண்டாம் என்றார்.(ம)

## தோல்வியை ஏற்றுக்...

மக்கள் வழங்கிய ஆணையை குறை வாக மதிப்பிட வேண்டாம். அப்படியாக இரு ந்தால், ஏன் இந்த தேர்தல் பிரசாரத்துக்கு நாட்டுத் தலைவர்கள், அமைச்சர்கள் என அனைவரும் சென்றார்கள்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை ஏற்று இந்த நாட்டைக் கொண்டு செல்வதற்கான பொறுப்பை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்து ள்ளார். (ம)

## புதிய பிரதமருக்கு...

யில் இருந்து நீக்கி புதிய பிரதமரை தெரிவு செய்வதற்கு சிலர் விரும்பவில்லை என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்து ள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற் றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் களுக்கிடையில் நேற்று திங்கட்கிழமை ஜனா திபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின், ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பி ட்டார். (ம)

## அறிக்கை வெளியிடு...

நாள் அமர்வில் ஐக்கிய நாடுகள் செய லாளர் நாயகம் அன்டோனியோ கட்ரஸ் மற் றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசேன் ஆகியோர் உரை யாற் றவுள்ளனர். இதன்போது இவர்கள் இரு வரும் இலங்கை தொடர்பில் சில விடயங் களை முன்வைப்பார்கள் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இம்முறை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான இரண்டு விவாதங்கள் நடை பெறவுள்ளதுடன் இலங்கை குறித்து பல் வேறு அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட வுள்ளன. இலங்கை தொடர்பான விவாத த்தின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இல ங்கை தொடர்பான தனது அறிக்கையை வெளியிடவுள்ளதுடன் அதில் அவர் தனது அதிருப்தியை வெளியிடுவார் என்று தெரி விக்கப்படுகின்றது. (ம)

## அதிரடி நடவடிக்கை...

சேன தயாராகியுள்ளதாக தெரியவந்து ள்ளது.

நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலக த்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அவசரப்பட்டு தீர்மானங்கள் எதனை யும் எடுக்க வேண்டாம் என்றும், இன்னும் ஒரு மாதம் பொறுத்திருந்து பார்க்குமாறும் ஜனாதிபதி இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்து ள்ளார். (ம)

## க.பொ.த சாதாரண...

தத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர அறிக்கை யொன்றை வெளியிட்டார் எனவும், குறித்த அறிக்கையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகி தனி த்து செயற்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டதாக வும் வெளியான செய்தி உண்மைக்கு புறம் பானது என தனது கையடக்க தொலை பேசியை பார்த்தவாறு ஆவேசத்துடன் கரு த்துக்களை முன்வைத்தார்.

இதன்போது குறுக்கிட்ட விமல் வீரவன்ச கையடக்க தொலைபேசியில் திரைப்படங்க ளை பார்த்துக்கொண்டு சமகால அரசியல் தொடர்பில் கருத்துரைக்க வேண்டாம் என கேளிக்கையாக தெரிவித்ததை தொடர்ந்து, சினம் கொண்ட ராஜித சேனாரத்ன,

இவருக்கு தொழில்நுட்பம் பற்றித் தெரி யாது. இவர் சாதாரண தரத்தில் கூட சித்தி யடையவில்லை முடிந்தால், க.பொ.த சாதா ரணதரப் பரீட்சை சான்றிதழைக் காண்பியு ங்கள் பார்ப்போம் என முகத்துக்கு முகம் பரிகாசம் செய்தார்.

இதனை கேட்டு கோபமுற்ற விமல் வீரவ ங்ச கல்வி பொதுத்தராதர பத்திர சாதாரண தர பரீட்சையில் சித்தியடையவில்லை என நிரூபித்தால் தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக ஆவே சமாக பதிலளித்தார். (ம)

## அரசை விட்டு...

நாட்டை ஸ்திரமற்ற நிலைமையில் இரு ந்து பாதுகாக்க தேசிய அரசாங்கத்துடன் இணைந்து தொடர்ந்து பயணிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் வரை, தேசிய அரசாங்கத்தை பாதுகாக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியத ற்கு அமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டு ள்ளதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினரும் பிரதி சபாநாயகரு மான திலங்க சுமதிபால சபையில் தெரிவி த்தார்.

அரசியல் நெருக்கடி தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன முன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, சுதந்திரக் கட்சியின் நிலைப் பாட்டை அறிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, நாடு தற்போது ஸ்திரமற்ற நிலைமையில் இருப்பதாலும், 2015ஆம் ஆண்டு மக்கள் ஆணையின் பிரகாரம் நாம் செயற்பட வேண்டியுள்ளதாலும், உயர் நீதி மன்ற தீர்ப்பு வரும்வரை தேசிய அரசாங்க த்துடன் இணைந்து பயணிக்குமாறு ஜனா திபதி கேட்டுக் கொண்டார். இதன்படி தேசிய அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்க நாம் தீர்மானித்துள்ளோம். தீர்ப்பு வரும் வரை நாம் தேசிய அரசாங்கத்திற்கு தொட ர்ந்து ஆதரவினை வழங்குவோம் என கூறி னார். (ம)

# முன் அறிவித்தல் ஏதும் இன்றி உதைபந்தாட்ட போட்டிக்கு தடை

## மாணவர்கள், பெற்றோர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்ட இறுதிச்சுற்றில் கலந்து கொள்ளவிருந்த பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளை முன் அறிவித்தல் எதுவும் வழங்காது போட்டியில் கலந்து கொள்ளாமல் தடை விதித்தமை மாணவிகளை பெரும் மனவேதனைக்குட்ப டுத்தியுள்ளதுடன் ஏமாற்றத்தையும் ஏற்படு த்தியுள்ளது என பெற்றோர் குற்றம் சாட்டியு ள்ளனர்.

வலய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று வலிகாமம் வலய பாடசா லைகளான பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தர பாடசாலைக்கும் தெல்லிப்பழை மகா ஜனா கல்லூரி மாணவிகளுக்கும் இடை யிலான உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப் போட்டி துரையப்பா விளையாட்டு மைதான த்தில் நடைபெறவிருந்தது.

போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்த நிலையில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள் இறுதி போட்டியில் கலந்து கொள்ள வர வில்லை. இதனால் மகாஜனா பாடசாலை மாணவிகள் காத்திருந்து போட்டி நடை பெறாத ஏமாற்றத்துடன் சென்றனர்.

இது தொடர்பில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை பாடசாலை அதிபரை தொடர்பு கொண்டு நாம் கேட்ட போது, தவி ர்க்க முடியாத காரணத்தினால் நாம் போட்டி யில் கலந்து கொள்வதற்காக மாணவர்களை அழைத்து செல்லவில்லை என தெரிவித் தார்.

இந்த விடயம் தொடர்பாக வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் எஸ்.சந்திரராஜாவை தொடர்பு கொண்டு கேட்ட போது இன்று (நேற்று) குறித்த போட்டி இருப்பதாக எனக்கு தெரியாது ஆனால் குறித்த பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் பாடசாலை முன்னேற்ற விடயங்கள் குறித்து இன்று (நேற்று) கலந்து ரையாடியிருந்தோம். அத்துடன் உடற்கல்வி பாட ஆசிரியர் தொடர்பான விடயங்களை சரி யான முறையில் செயற்படுத்துமாறும் கூறி யிருந்தேன். ஆனால் மாணவிகளை போட்டி க்கு அனுப்பாமை தொடர்பாக எனக்கு எது வும் தெரியாது என தெரிவித்தார்.

இப்பாடசாலை மாணவிகள் ஏற்கெனவே நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் தேசிய மட்டத்தில் முதலிடங்களை பெற்று சாதித்துள்ளனர். நிர்வாக மட்டத்தில் ஏற்படும் சில குழப்பங்கள் காரணமாக மாணவிக ளின் கனவுகள் சிதைக்கப்படுகின்றன. இச் செயற்பாடு அவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளது என பெற்றோர் தெரிவி த்திருந்தனர். (ம-9)

## மரண அறிவித்தல்

# Dr.நமசிவாயம் சத்தியசீலன்

(ஆயுள்வேத வைத்தியர்)

பிறப்பு 02 - 12 - 1938



இறப்பு 19 - 02 - 2018

யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சத்தியசீலன் நேற்று (19.02.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம்-மரகதம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நேசமலரின் அன்புக் கணவரும், இராஜஇராஜேஸ்வரி (கனடா), காலஞ் சென்றவர்களான தேவசகாயம், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, கனகலிங்கம் மற்றும் மகேஸ்வரன், மகேந்திரன் (கனடா), சகுந்தலாதேவி (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், மகேஸ்வரி, பொன்னுத் துரை, பாலசிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா), திலகவதி, சாந்தி (கனடா), காலஞ் சென்ற விவேகானந்தராஜா மற்றும் வாகீஸ்வரன், நாகேஸ்வரன், லீலாவதி (கனடா), யோகேஸ்வரன் (கனடா), புஸ்பவதி, தவபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சத்தியமலர் (ஆசிரியர்-யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), சத்தியநேசன் (சுவிஸ்), சத்தியநாதன் (சுவிஸ்), சத்தியமாலா (சுவிஸ்), சத்தியராணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.கல்வி வலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார் (நீர்ப்பம்பி இயங் குனர், யாழ்.பல்கலைக் கழகம்), மாலினி (சுவிஸ்), தர்சினி (சுவிஸ்), தர்மகுலசிங்கம் (சுவிஸ்), சுஜீதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வட மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயிதன், டிலானி, யாழினி, சரணி, சரண், சஞ்ஜை, டினுஷா, அபிஷா, அபிசாயி, அனுசாயி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் நந்தவனம் குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்கு வில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"நந்தவனம்" குளங்கரைவீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(சி-1660)

தகவல்:குடும்பத்தினர்
0777742459, 0776062749

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ள புதிய வீடு வாடகைக்கு உண்டு (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :

(2561) 077 069 0275

## சிக்கன் புரியாணி

அறிமுகம். Rs: 250/=

பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chickan - Rice & Bites

யாழ் பாடியில்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800


# இதய அஞ்சலி



## திரு.கந்தையா நீலகண்டன்

(தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்)

இந்து மக்களுக்காக அயராது குரல் கொடுத்த உன்னத தலைமகனின் பிரிவு மிகுந்த வேதனை தருகிறது. எங்கள் தேவஸ்தானத்துக்கும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் வளர்ச்சிக்கும் அன்னார் ஆற்றிய பணி மறக்க முடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை. - துர்க்காபுரம் மகளிர் இல்லம்

(வி–1652)

# அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு



அமரர்

## சிதம்பரப்பிள்ளை சிவபாலன்

வையகத்தில்: 09.12.1967 வானகத்தில்: 24.11.2017

கடந்த 24.11.2017 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிதம்பரப்பிள்ளை சிவபாலன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை காலை 6 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது சகோதரியின் இல்லத்தில் (தும்பசிட்டி வீதி, பருத்தித்துறை) முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : தயவு செய்து இவ்அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1-ம் கட்டை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

இங்ஙனம்: குடும்பத்தினர்.
076 560 7672

## கிணற்றில் தவறி...

எவில் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்த சிறுவன் ஜெயகுமாரன் தீசன் என தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் பட்டம் ஏற்றிக்கொண்டு பின்பக்கமாக ஓடிய போதே சிறுவன் கிணற்றில் விழுந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. மேலும் உயிரிழந்த சிறுவனின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## தமிழீழ கதைகளை...

போதிலும் இவை பொய்கள் மூலமாக பெறப்பட்ட வாக்குகளாகும்.

தேர்தல் பிரசாரத்தில் தமிழீழ கதைகளை கூறி சிங்கள மக்களை ஏமாற்றி இந்த வாக்குகளை பெற்றுள்ளனர்.

ஆகவே நாம் கேட்காத தமிழீழத்தை பொதுஜன பெரமுனவினர் பிரசாரத்தின் மூலமாக பெற்றுக்கொடுக்கவே முயற்சித்து வருகின்றனர். நீங்கள் தொடர்ச்சியாக இவ்வாறு நடந்துகொண்டால் நிச்சயம் தமிழீழம் மலரும் என சம்பந்தன் எச்சரித்தார். (ம)

## கூட்டமைப்பு இன்றி...

பெரும குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் இரு கூட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. முதலில் சிறிகொத்தாவில் நடைபெற்ற கூட்டத்தில் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. அதன் பின்னர் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்திலும் பிரதமர் எதிர்பார்த்த விடயம் நடக்கவில்லை. 113 உறுப்பினர்களின் கையெழுத்துக்களை பெற்று நேற்றுக் காலை அவற்றை நாடாளுமன்றில் சமர்ப்பித்து பெரும்பான்மையை நிரூபிக்க முயன்றார். ஆனால் அது தோல்வியில் முடிவடைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி ஐக்கிய தேசியக் கட்சியால் ஆட்சியமைக்க முடியாது. அவர்களே தற்போது உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சியாக உள்ளனர். அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் பிரதமர் ரணிலை நிராகரித்துள்ளனர்

தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை இல்லையென்பது தெளிவாகிவிட்டது. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐ.தே.கவிற்கு 32 சதவீதமான வாக்குகளே கிடைத்தன. ஜனாதிபதிக்கு 14 வீதத்தை விடவும் குறைவான வாக்குகளே கிடைத்தன. இருவருக்குமே மக்கள் ஆணை கிடைக்கவில்லை.

113 உறுப்பினர்களின் ஆதரவின்றியே நாட்டின் பிரதமர் ஆட்சியில் உள்ளார். இந்நிலையில், எமக்கு உண்மையான அரசாங்கம் ஒன்று இல்லை என்ற விடயத்தை நாட்டு மக்களுக்கு ஊடகங்களே தெரிவிக்க வேண்டும் என்றார். (ம)


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் O/L தகைமையுடன் இருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். முகாமைத்துவதுறையில் ஆர்வமுடையவர்கள் உடனடியாக இணைந்து கொள்ளுங்கள்.

- அடிப்படை சம்பளம் 12,500/=
- தங்குமிட வசதி உண்டு
- வயதெல்லை 18 - 35
- குறுகிய காலத்தில் பதவி உயர்வு

(C-1659)

தொடர்பு: 077 408 3273

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550/=Kg

கனடா-1050/=Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-1566)

தொடர்புகளுக்கு: 0768226240

V2 TRAVELS


# மரண அறிவித்தல்



## அம்பலவாணர் தில்லைநாதன்

(ஓய்வுநிலை உப அதிபர் - ஆவ. நடராசா இராமலிங்க வித்தியாசாலை, தர்மகர்த்தா சபை தலைவர்- ஆவரங்கால் இராமலிங்க சுவாமி கோயில்)

ஆவரங்காலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தில்லைநாதன் அவர்கள் நேற்று (19.02.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 205 8023, 071 815 1764
திருமதி சிவகுமார் சுகந்தி (கொழும்பு),
தி.தேவநாதன் (லண்டன்),
தி.ஸ்ரீரங்கன் (கனடா)

சிவன் வீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.

(2843)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.